# குன்றின் குரல்

ஆண்டு 13 ஜனவரி – மார்ச் 94 இதழ் 1




விலை
ரூ 10

# குன்றின் குரல்

ஆண்டு 13
இதழ் 1
ஜனவரி – மார்ச் 1994

ஆசிரியர்
அந்தனி ஜீவா

இணை ஆசிரியர்
ஜே.ஜேஸ்கொடி

ஆசிரியர் குழு
வண.மரிய அந்தனி
திருமதி வசந்தி சிவசாமி
சு. முரளிதரன்

பொறுப்பாசிரியர்
செல்வி.க.மேனகா

வெளியீடு
தோட்டப்பிரதேசங்கட்கான
கூட்டுச் செயலகம்

அச்சுப் பதிவு
லங்கா பப்ளிசிங் ஹவுஸ்
கொழும்பு.

முகவரி
குன்றின் குரல்
30,புஸ்பதான மாவத்தை,
கண்டி

குன்றின் குரல்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூபா | 10 |
| ஆண்டு சந்தா | 40 |

சந்தா அனுப்பும் முகவரி

MANAGING EDITOR
C.S.P.A.
30, PUSPADANA MAWATHA,
KANDY.
PHONE: 08.22955

## மலையகமும் அதன் எதிர்காலமும்

மலையகம்... கல்வி, கலை இலக்கியம், தொழிற்சங்கம் என்று பல்வேறு துறைகளிலும் ஒரு கேள்வி குறியாகவே இருக்கிறது, இருந்து வருகிறது.

கல்வியை பொறுத்தவரையில் ஆசிரியர் பற்றாக்குறை, மலையகத்திற்கு என்றே உருவாக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் இழுபறி நிலை, நிர்வாக சீர்கேடுகள் தொழிற்சங்க ஊடுருவல் இப்படி பல்வேறு பிரச்சனைகள். ஆரம்பித்த காலம் முதல் இதுவரை எத்தனை ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது.

இதுபோன்று கலை இலக்கியங்களை எடுத்துக் கொண்டால், ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இத்துறைகள் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. கடந்த ஆண்டு தமிழ்த்தின விழாவில் அகில இலங்கை ரீதியில் நாடகப்போட்டியில் மலையகத்திற்கு கிடைத்த 'தங்கப்பதக்கம்' இன்றுவரை வழங்கப்படாமை. அது மாத்திரமல்ல இந்த ஆண்டு தமிழ்த்தின விழாவில் சமூக நாடகம் நீக்கப்பட்டு விட்டது. இது மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் நாடகத்துறைப் பற்றிய ஆர்வமின்மையை ஏற்படுத்தியுள்ளது.

மற்றும் மலையக மக்களின் வாழ்வோடும், தொழிலோடும் இரண்டறக்கலந்துள்ளது மலையகத் தொழிற்சங்கங்கள். இந்த தொழிற்சங்கங்கள் ஆட்சேர்ப்பதிலும், சந்தாப் பணத்தை அதிகரிப்பதிலும் காட்டும் ஆர்வத்தை அவர்களின் முன்னேற்றத்தில் காட்டுவதில்லை. பெரிய சங்கம் முதல் குட்டி சங்கம் வரை ஒரே மாதிரியான நடவடிக்கை தான்.

"இது மாத்திரமல்ல, கடந்த ஐம்பது ஆண்டுகளாக 'நானே ராஜா! நானே மந்திரி!" என ராஜாங்கம் நடத்தி வந்த 'மாபெரும்' தொழிற்சங்கத்தில் தலைவருக்கும் தளபதிக்கும் இடையில் பெரும் போராட்டம், ஒருவருக்கு ஒருவர் "ஊழல்" பட்டம் சூட்டி இருட்டில் நடந்த திருவிளையாடல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் விஷயம் புரியாமல் வேடிக்கைப் பார்க்கிறார்கள்.

தோட்டக் குடியிருப்புகள் தங்களுக்கே சொந்தமாகும் என்று பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தவர்கள், வெறும் தேர்தல் வாக்குறுதி என எண்ணி வேதனைப்படுகிறார்கள். தோட்டங்கள் தனியார்மயமானால் தோட்டத் தொழிலாளர்கள் சொர்க்க வாழ்வு நடத்தலாம் எனக்கூறிய தலைவர்கள் அரசு ஏமாற்றி விட்டது என நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

தலைவர்கள் பென்ஸ் கார்களிலும், பஜரோ ஜீப்புகளிலும் பறக்க, தொழிலாளர்கள் கண்ணீரில் மிதக்கிறார்கள். என்று விடியுமோ இவர்களின் வாழ்வு. புதிய தலைமைகள் அதுவும் இந்த மக்களிடையே தோன்றாத வரையில் மலையக மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகத்தான் இருக்கும்.

\- ஆசிரியர்

# பெருந்தோட்டத்துறையில் ஆரம்பக் கல்வியின் இன்றைய நிலை.



எஸ்.விஜேசந்திரன்
விரிவுரையாளர் பொருளியற்றுறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

"எழுத்தறிவின்மை முற்றாக ஒழிக்கப்பட்டு அனைவரும் அனைத்து மட்டங்களிலும் சர்வாம்ச கல்வியை சமத்துவமாக பெறுவதற்கான உரிமை உறுதி செய்யப்பட வேண்டும்" என்னும் கூற்று சர்வதேச ரீதியாக குரலெழுப்பப்பட்டு அக்குறிக்கோளை அடைவதற்கான அனைத்து செயற்பாடுகளும் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன. "அனைவருக்கும் கல்வி" என்னும் நோக்கை இலங்கையிலும் உறுதி செய்வதாக மேலுள்ள கூற்றை இலங்கை அரசியல் சாசனத்தின் 27ஆம் உறுப்புரை கூறுகின்றது.

ஒரு நாட்டினதும் அல்லது சமூகத்தினதும் அபிவிருத்தியை குறித்து காட்டுவனவாக சமூகக்குறிகாட்டிகள் விளங்குகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை சமூக விருத்தியில் விரும்பத்தக்க மேம்பாட்டையும் வாழ்நிலை விருத்தியையும் கொண்டுள்ளது. குறிப்பாக, இலங்கையினது கல்வித்துறை சார்ந்த அனைத்து குறிக்காட்டிகளும் ஏனைய குறைவிருத்தி நாடுகளுடன் ஒப்பிடு மிடத்து மிக உயர்வான போக்கினை கொண்டுள்ளமை வெளிப்படை.

இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்பு ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் பாடசாலை நுழைவினை விருத்தி செய்வதற்கும் கல்வி ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்துள்ளன. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைகழகம் வரையிலான இலவசக்கல்வி, நாடெங்கும் பரவலாக அமைந்திருக்கும் தொடக்கப்பள்ளிகள் மூலம் கல்வியை விஸ்தரித்தல், அனைத்து மட்டங்களிலும் தாய்மொழிமூலமான போதனையின் அறிமுகம், இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வினியோகம் போன்றவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. இந்நிகழ்ச்சி திட்டங்கள் கடந்து ஐந்து தசாப்தங்களில் நகர்த்துறையிலும் கிராமத்துறையிலும் பாடசாலை நுழைவு துரிதமாக விரிவடைவதற்கு பங்களிப்புச் செய்திருக்கின்றன.

இலங்கையில் வெவ்வேறு சமூகங்களின் முன்னேற்றத்தையும் எடுத்து காட்டும் குறிக்காட்டிகளில் ஆரம்ப பாடசாலைக்கு செல்வோர் வீதமும் ஒரு முக்கிய அளவீடாகும். பாடசாலைக்கு செல்லும் வயது பிரிவினரில், பாடசாலைக்குள் நுழைவோர் அளவு இலங்கையைப் பொருத்த மட்டில் மிகவும் விரும்பதக்கதும் உயர்நிலையிலானதுமாகும். ஆனால் இந்நாட்டில் வாழும் பல்வேறுப்பட்ட சமூகப் பிரிவினருடன் ஒப்பிடுமிடத்து கல்வி ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட மக்கட்கூட்டமாக பெருந்தோட்டத் துறை சார்ந்தோர் காணப்படுகின்றமை வேதனைக்குரிய தொன்றாகும். அண்மை காலங்களில் சமூக ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ள முக்கிய பிரச்சினையாகவும் இது விளங்குகின்றது.

இலங்கையில் பாடசாலைக்குச் செல்லும் சனத்தொகையினராக 5-14 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் காணப்படுகின்றனர். இவ்வயது பிரிவு இலங்கையின் கல்வி முறைப்படி ஆண்டு ஒன்று முதல் ஆண்டு எட்டு வரையிலான வகுப்புகளை உள்ளடக்கும். மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவினரில் இருபிரிவினரை நாம் அடையாளம் காணக்கூடியதாயிருக்கும். அவையாவன பாடசாலைக்குச் சமூகமளிப்போர், பாடசாலைக்குச் சமூகமளிக்காதோராவர். இலங்கையில் தேசிய ரீதியாக 5 - 14 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளில் 84.4 பாடசாலைக்குச் சமூகமளிப் போராகவும் 15.6 சதவீதத்தினர் மட்டுமே பாடகாலைக்குச் சமூகமளிக்காதோராகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் 1986/87 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி சமூக பொருளாதார ஆய்வு அறிக்கையின்படி பாடசாலைக்குச் செல்லாதோர் நகரம், கிராமம், பெருந்தோட்டம் ஆகிய மூன்றுத் துறைகளிலும் முறையே 14.3 சதவீதத்தினராகவும் 18.8 சதவீதத்தினராகவும் 40.9 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். ஏனைய இருதுறைகளோடும் ஒப்பிடு

மிடத்து பெருந்தோட்டத்துறையிலேயே பாடசாலைக்குச் செல்லாதோர் அளவு உயர்வாக உள்ளதனை இத்தரவுகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. பாடசாலைக்குச் செல்வோரின் அளவினை தேசிய மட்டமான 15.6 சதவீதத்துடன் பெருந்தோட்டத்துறை மட்டமான 40.9 சதவீதத்தை ஒப்பிடுமிடத்து தேசிய ரீதியிலும் பார்க்க 25.3 சதவிதத்தினர் அதிகமாக காணப்படுகின்றமை பெருந்தோட்ட துறை சார்ந்த சமூகத்தின் கல்வி பின்னடைவின் உயரளவிலான வெளிப்பாடாகும்.

ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் வயதுப்பிரிவினரின் பாடசாலைக்குச் செல்வோர் செல்லாதோர் பற்றிய தரவுகளை வயது பிரிவு அடிப்டையில் ஆராய்வோமாயின் மேலும் பல விரும்பத்தகாத போக்குகளை அவ தானிக்க கூடியதாயுள்ளது. 1985/86 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஊழியர்படை சமூக பொருளாதார ஆய்வு அறிக்கையின்படி 5 - 9 வயதுக்கிடைப்பட்டோரில் 46.6 சதவிதத்தினரும் 10 - 14 வயதுக் கிடைப்பட்டோரில் 24.9 சதவீதத்தினரும் பாடசாலைக்குச் சமூகமளிக்காதோராக உள்ளனர். இதில் முதல் பிரிவு பிந்திய பாடசாலை நுழைவு, பாடசாலை செல்லாமை என்பவற்றினதும் இரண்டாவது பிரிவு பாடசாலையை இடைநிறுத்துவதன் விளைவாகவும் உயரளவாக காணப்படுகின்றது.

பெருந்தோட்டத்துறையில் பாட சாலைக்குச் செல்லாதோரின் விசேட தன்மைகளை நோக்கு வோமாயின் இவர்களை மேலும் இரு பிரிவாக வகைப்படுத்தக் கூடிய தாயிருக்கும். அப்பிரிவுகளாவன, ஒருபோதும் பாட சாலைக்குச் செல்லாதோர், பாட சாலையை இடைநிறுத்தியோர் என்பன வாகும். பெருந்தோட்ட துறையில் 5 - 14 வயதுக்கு இடைப்பட்ட மொத்த பிள்ளைகளில் 26.2 சதவீதத்தினர் ஒருபோதும் பாடசாலைக்கு சமூக மளிக்காதவர்களாகவோ அல்லது பாட சாலை அனுமதி பெறாதவர்களாகவோ காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆரம்பக்கல்வி பின்னடைவின் பிரதான அம்சங்களான பாடசாலை அனுமதி பெறாதோர், பிந்திய அனுமதி பெற்றோர் இடைநிறுத்தியோர் போன்ற செயற்பாடுகளுக்கு பல்வேறு காரணிகள் மூலக்காரணங்களாகவிருந்து வந்துள்ளன. வசதியற்ற பாடசாலைகள், அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்ய முடியாதவை, சிறுவர்கள் கடைச்சிப்பந்திகளாகவும் வீட்டு வேலைக்காரர்களாகவும் சேர்க்கப்படல், சுகாதார நிலை, தந்தையின் கல்விநிலை என்பவற்றை பிரதான காரணிகளாக கொள்ளலாம்.

பெருந்தோட்டத் துறையில் பாடசாலைக்குச் செல்லும் வயது பிள்ளைகளில் 19.1 சதவீத்தினர் வசதி களற்ற பாடசாலைகளின் காரண மாகவும், 18.6 சதவிதத்தினர் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமையினாலும் 9.3 சதவீதத்தினர் வீட்டுவேலை அல்லதுகுடும்ப வேலை காரணமாகவும் 7.1 சதவீதத்தினர் ஆரோக்கியமற்ற உடல் நிலை (சுகாதார நிலைமை) யினாலும் பாடலைக்குச் செல்வதனை தவிர்த்துக் கொண் டுள்ளனர்.

பெருந்தோட்டத்துறை மக்களி டையே நிலவும் பாரியளவிலான வறுமை கிடைக்கக் கூடியதாயிருக்கும் கல்வி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதனை தடுக்கிறது. கல்வி, புத்தகங்கள், மதியபோசனம் என்பன இலவசமாக வழங்கப்பட்ட போதிலும் நுழைவுக்கட்டணங்கள், உடைகள் மற்றும் எழுதுகருவிகள் போன்ற வற்றுக்கு வறிய பெற்றோரினால் பணம் செலவு செய்ய முடிவதில்லை. பல்வேறு வடிவங்களிலும் காணப்படும் சிறுவர் தொழில் வாய்ப்புகள் கல்வியைத் தடுக்கும் மற்றொரு காரணியாகும். பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் அக்கறையின்மையும் பிள்ளைகள் பாடசாலை செல்லாதிருப்பதற்கான ஒரு காரணமாக இருக்கிறது.

பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாமலிருப்பதற்கு பங்களிப்புச் செய்யும் பிறிதொரு காரணி கல்வியமைப்பின் குறைபாடுகளாகும். பெருந்தோட்ட துறையில் காணப்படும். ஆரம்ப பாடசாலைகள் வசதிகுறைந்த பாடசாலைகளாகவே காணப்படுகின் றன. இப்பாடசாலைகளின் வகுப்பறை களும் போதனா முறைகளும் பிள்ளை களை கவர்ந்திழுப்பனவாக இல்லை. வீட்டுக்கும் பாடசாலைக்கும் உள்ள தூரமும் பாடசாலைக்கு செல்லாமைக்கு ஒரு பங்களிப்புக் காரணியாக இருக் கின்றது. பெருந்தோட்டத்துறை பாடசாலைகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவை ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து அல்லது ஆண்டு ஆறு வரையிலான வகுப்புகளையே கொண்டுள்ளன. ஆரம்ப உயர்பிரிவு பாடசாலைகள் நகர்களில் அமைந் துள்ளமையும் ஒரு காரணியாக தென்படு கின்றது. அத்தோடு பெருந்தோட்ட துறையில் பூர்வ பாடசாலைகள்( 3.5 வரையிலான வயதுடைய பிள்ளை களுக்கான பாலர் முன்பாடசாலைகள்) இல்லாமையும் அப்பிள்ளைகளின் கல்வி மீதான நாட்டம் குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணியாக விளங்குகின்றது. இப்பூர்வ பாட சாலைககள் பிள்ளைகளின் மனப்பாங்கு களையும் பாடசாலைகள் புதிய சூழலுடன் இணைந்து செல்லக்கூடிய விதத்தில் பிள்ளைகளின் உளவியல் ஆற்றலையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் அடுத்த பாடசாலை கட்டத்துக்கு அவர்களைத் தயார்படுத்துகின்றன. பெருந்தோட்டத்துறை சார்ந்த பிள்ளைக ளுக்கு பூர்வ. பாடசாலை வசதிகள் கிடைக்கப்பெறுவதில்லை. இவை பெரும்பாலும் தனியார்களால் நகர்ப் புறங்களில் மத்தியதர குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்ற வகையிலேயே நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக பெருந்தோட்ட பிள்ளைகளின் வீட்டு சூழலுக்கு பாடசாலைச் சூழலுக்கு மிடையே பெருத்த இடைவெளி காணப்படுகின்றது. பிள்ளைகள் பாடசாலையை விட்டு செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு திட்ட மிடலும் செயற்பாடும் கல்வி நிலை மேம்பாட்டுடன் ஒன்றிணைக்கப்படாத ஒன்றாகவிருப்பின் அத்தகைய நடவடிக்கைகள் அர்த்தமற்றதாக இருப்பதுடன் சமூக மேம்பாட்டை மேலும் பின்னடைய செய்வன வாகவுமே காணப்படும். பெருந்தோட்ட சமூகத்தின் முன்னேற்றம் கல்வி வளர்ச்சிக் கூடாகவே இலக்கை எய்த கூடிய தாயிருக்கும். எனவே பிள்ளைகளின் எழுத்தறிவையும் எண்ணறிவையும் வளர்த்துக் கொள்வதற்காக தொடக்கப்

பள்ளிகளில் சேருவது அவசியமான தொன்றாகும். தொடக்கப் பள்ளியின் நுழைவு விகிதத்தில் ஏற்படும் எந்தவொரு வீழ்ச்சியும் எழுத்தறிவு விகிதத்தில் வழ்ச்சியை ஏற்படுத்தவ தாகவும் சமூக மேம்பாட்டை பின்னடையச் செய்வதாகவும் அமையும். ஆரம்பக்கல்வி மாணவர்களது திறன்களை வளர்த்து சுயவிருத்திக்கான அடித்தளமொன்றை வழங்குகின்றது. அதனால் குறைந்த பட்சம் ஆரம்பக்கல்வியையாவது பூர்த்தி செய்யாத பெருந்தோட்டப் பிள்ளைகள் தமக்கு பயன்படப்போகும் அறிவு மற்றும் தகவல்களை இழந்தவர்களாவர். ஏதாவதொரு தொழிற்பயிற்சி பெறுவ தற்கு ஆரம்ப அல்லது இரண்டாந்தர கல்வி ஒரு முன் நிபந்தனையாகும்.

பெருந்தோட்டத்துறை சார்ந்த சமூகத்தின் கல்வியில் பின் தங்கிய பகுதிகளை இனங்கண்டு கொள்வதும் பாடசாலை நுழைவினை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்வதும், பாட சாலை செல்லாத பிள்ளைகளுக்கு முறை சாரா கல்வியை வழங்குவதும் இன்றைய தேவைகளாகும். இத்தகைய செயற்பாட்டில் சீடா, யுனிசெப் போன்ற அமைப்புகள் ஏற்கனவே ஈடுப் பட்டுள்ளன. பெருந் தோட்டங்க ளில் சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ள அரசு சார்பற்ற நிறுவனங்கள் மேற்கூறிய செயற் பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப் பதற்கும் பெருந்தோட்டத் துறைகளில் கல்வியறிவு பெற்றோர் தொண்டர் அடிப்படையில் ஒன்றிணைந்து பரவலாக தோட்டங்கள் தோறும் தொண்டாற்ற வேண்டியதும் அவசியமாகும். அரசியல் துறை சார்ந்தோரினதும் கல்வித்துறை சார்ந்தோரினதும் சமூக சேவைகள் துறை சார்ந்தோரினதும் வசதி படைத்தவர் ஒத்துழைப்புடன் கூடிய ஒன்றிணைந்த செயற்பாடே கல்வி வளர்ச்சியில் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கான திறவு கோல்களாக அமையும் இது பெருந்தோட்ட துறை சமூகத்தை கல்வியில் மேம்பாட்டை செலுத்துவதுடன் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதற்கு வழி கோலுவது மட்டுமன்றி தேசிய மட்டத்தில் எழுத்தறிவு விகிதத்தை உயர்த்துவதற்கும் பங்களிப்புச் செய்யும்.

• • • • • • • • •

# கொழுந்துப் பாடல்



கொழுந்தெடுப்போம் கொழுந்தெடுப்போம் கொழுந்தெடுப்போமே— நாம
கொழுந்தெடுப்போம் கொழுந்தெடுப்போம் கொழுந்தெடுப்போமே
காலை மாலை கருத்தாக கொழுந்தெடுப்போமே —நாம
கோலை கையில் ஏந்திக்கினு கொழுந்தெடுப்போமே

நாட்டின் முதுகெலும்புகள் நாம் தெரிஞ்சு கொள்ளுங்க — இனி
நாடு என்றும் நம் கையில புரிஞ்சு கொள்ளுங்க
வியர்வை சிந்தி நாம் உழைக்கும் காலம் இதுவல்லோ — அதனால்
உயர்வை நோக்கிநடைபோடும்நாளும் இதுவல்லோ

மழையின்னும் வெயிலின்னும் பாத்திருக்காமே — நாம
பனியின்னும் குளிருன்னும் போர்த்திருக்காமே
எந்த நாளும் நம்மை நாமே நம்பி வாழுறோம் — நம்ம
சொந்த பூமி தழைச்சிருக்க ஒழைச்சு வாழுறோம்

தளிராக செழிச்சிருக்கு தேயிலைக்காடு — நம்ம
ஒழைப்பாலே பொலிஞ்சிருக்கும் இலங்கை நம்நாடு
கிள்ளி எடுத்த கொழுந்துகளின் பசுமை எங்குமே
அள்ளி எறைச்ச மாணிக்கமா எங்கும் தங்குமே

நாட்டுக்கு நம் கரங்கள்தானே நாளும் வேணுமே
நாம கண்ட ஒழைப்பினால நாடு உயருமே
எட்டுத் திசையும் எங்க நாடு எழுச்சி காணவே
எங்க ஒழைப்பு தந்த பங்கு எங்கும் நெறயுமே

வெள்ளைக்காரன் தந்து போன தேயிலதாங்க — இப்போ
வெளஞ்சு நல்லா உசிர காக்கும் தெய்வமே தாங்க
நம்ம உசிர காத்திருக்கும் கொழுந்துக தானே
நாம என்றும் வணங்கவேணும் நம்பிக்கையோட

# நூற்றாண்டு கண்ட நடேசய்யர்!

சாரல்நாடன்

*நாடற்றவர்களாக ஒரு சமூகத்தினர் ஆக்கப்பட்ட கொடூரம் நடேசய்யர் இறந்த ஒராண்டு இடைவெளிக்குள் ஏற்பட்டது. நடேசய்யரின் பணியை விட்ட இடத்திலிருந்து எடுத்துச் செல்ல எவருமில்லாததால் ஏற்பட்ட இந்த இழிநிலையிலிருந்து மலையகம் மீள்வதற்கு இதுநாள் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று*

நடேசய்யர், மலையகத்தின் நிர்மாணச் சிற்பி என்பதை முழு உலகமும் இன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் அவர் கொடிகட்டிப் பறந்தார்.

அவர் இந்தியாவில் பிறந்து இலங்கையில் குடியேறி வாழ்ந்தார். அவரது காலப்பகுதி (1920 /1947) இலங்கையின் அரசியல் பத்திரிகைத் துறை, சமூகசீர்திருத்தம், பெண் விடுதலை, தொழிற்சங்கத்துறை, மலையக இலக்கியம், இந்து சமயப்பணி என்று பலதரப்பட்ட விதத்தில் - அவரது ஆற்றலையும் செயல்திறனையும் வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

வரலாறு மறக்காத இந்த செயல் வீரனின் பெருமை இன்று கடல்கடந்த நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. ஜெர்மனி, ஆஸ்திரேலியா, தமிழகம் என்று அவரது பெருமை பரவி அவரது நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சிகள் அங்கெல்லாம் நடாத்தப்படுகின்றன.

இலங்கைத் தீவில் பல சாதனைகளை செய்து முடித்த கோ.நடேசய்யர் 7-11-1947ல் மரணித்தார். அவருக்கு அப்போது வயது ஐம்பத்தாறு.

நடேசய்யர் இலங்கையில் வாழ்ந்த போது ஆங்கிலேயர் இங்கு அரசோச்சினர். ஆங்கிலேயர் இங்கு மேற்கொண்ட பெருந்தோட்ட விசாலிப்பு முயற்சிகளுக்கென்று கொண்டு வரப்பட்ட இந்திய வம்சாவளியினரின் சந்ததியினரே 'மலையகத் தமிழர்' என இன்று தம்மை இனம் காட்டிக்கொண்டு இருக்கின்றனர்.

இவர்களுக்கென்று தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட நடேசய்யரின் மரணச் செய்தியை ஒப்சேவர், டெய்லி நியூஸ், டைம்ஸ் ஒஃவ் சிலோன் என்ற இலங்கையின் முன்னணி ஆங்கில ஏடுகள் முதல் பக்கத்தில் அவரது படத்துடன் வெளியிட்டு முக்கியத்துவம் கொடுத்தன.

"இலங்கையில் முதன்முதலாக தினசரி தமிழ்ப் பத்திரிகை ஒன்றை வெளியிட்ட" உண்மையைப் பெருமையாகக் கூறி அவரது இழப்பைப் பற்றி எழுதியிருந்தது சுதந்திரன் நாளேடு.

"தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டநஷ்டங்களை முதன் முதலில் உலகறியச் செய்தவர். நடேசய்யர் ஒரு தர்மவீரன். எதற்கும், யாருக்கும், எங்கும், எப்பொழுதும் அவர் அஞ்சியதில்லை." என்று எழுதியிருந்த வீரகேசரி தனது பங்குக்கு "இலங்கை இந்திய சமூகம் ஒரு பெரிய அறிவாளியை இழந்து விட்டது" என்றும் குறிப்பிட்டிருந்தது.

நடேசய்யரின் சட்டசபை பிரதிநிதித்துவத்தையும், பத்திரிகைத் தொழில் முயற்சியையும் குறிப்பிட்டெழுதிய தினகரன் "நடேசய்யர் ஒரு சமயம் தமது நிறுவனத்தில் பத்திராதிபராக இருந்தார்" என்ற செய்தியையும் வெளியிட்டு இருந்தது. காலனித்துவ ஆட்சியில் இத்தகு வியக்கத் தக்க சாதனைகளைப் புரிந்த நடேசய்யர் இந்த ஆண்டில் நூற்றாண்டு காணும் சிறப்பைப் பெறுகின்றார்.

மலையகத்தமிழரின் பிரச்சனைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதன் காரணத்தால் முக்கியத்துவம் பெற்றவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றார்கள்.

அவர்களில் -

சிலர், நாடு கடத்தப்பட்டு இருக்கின்றார்கள்; வேறும் சிலர், சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள்; மற்றும் சிலர், பைத்தியக்காரர்களாகக் கருதபட்டு அங்கொடைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள்; மேலும் சிலர், தூக்கிலிடப்பட்டிருக்கின்றார்கள்; இன்னும் சிலர், துப்பாக்கிக்கு இரையாக்கப்பட்டுள்ளார்கள்; பெரும்பாலானோர்கள், நித்திய வாழ்க்கையிலேயே தொழில் பறிக்கப்பட்ட நிலையில் நடுத்தெருவில் தூக்கி எறியப்பட்டுள்ளார்கள்;

இத்தனைக் கொடுமைகளுக்கும் மத்தியிலும் "நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும்" ஆகச் செயல்பட்ட ஒருவராக நடேசய்யர் விளங்குகின்றார்.

நாடு கடத்தப்பட்டவர்களுக்காக சட்ட சபையில் அவர் வாதிட்டார்;

சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்காக அவர் பேச்சாலும், எழுத்தாலும் போராட்டம் மேற்கொண்டார்; சித்தப் பிரமைக் கொண்டவர்களாகக் குறிப்பிடப்பட்டச் சிலருக்காக அவர் நாட்டின் அதி உன்னத பதவி வகிக்கும் தேசாதிபதி அவர்களை நேரில் கண்டு விண்ணப்பம் செய்தார்; இவைகளின் காரணமாக, நடேசய்யர் என்ற இந்திய வம்சாவளித் தமிழன், - இலங்கைத் தீவினின்றும் அப்புறப் படுத்தப்படுவதற்கான அபாயம் சூழ்ந்தது; குறைந்த பட்சத்தில், இலங்கைத் தீவுக் குள்ளாகவே உயிரிழக்கும் ஆபத்து ஏற்பட்டது. இந்த இரண்டு விபத்துக்களையும் நடேசய்யர் தான்வகித்த சட்டசபை உறுப்பினர் பதவியால் இலகுவில் தவிர்த்துக் கொண்டார்.

சட்டசபை உறுப்பினர் பதவியில்- அவரது காலப்பகுதியில் - இந்திய வம்சாவளியினருக்காக; அமர்ந்திருந்தவர்களில் ஆதாம் அலி, இக்னேஸியஸ் பெரைரா, பெரிசுந்தரம் என்ற சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் இக்னேசியல் பெரைரா, பெரிசுந்தரம் என்ற இருவரும் மிதவாதிகள். இந்த இருவருக்கும் சுதந்திரம் பெற்ற இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டுக் கௌரவம் செலுத்தியுள்ளது. இந்த இருவரும் காலனித்துவ காலப்பகுதியில் அமைச்சர் பதவிகளை அலங்காரம் செய்துள்ளனர்.

நடேசய்யர் காலனித்துவ காலப் பகுதியில் இலங்கையில் ஆங்கிலேயருக் கெதிராகக் குரல் எழுப்பியவர்; அவர்களின் ஆட்சி அகற்றப்படுதல் வேண்டும் என்று கொடிபிடித்தவர்; அவர்களுக்கெதிராக ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களை ஒன்று திரட்டி கூட்டம் நடத்தியவர்; அட்டன் புகையிரத நிலையத்தில் பல்லாயிரக் கணக்கான ஏழைத்தொழிலாளிகளை ஒன்று திரட்டி இலங்கை ஆட்சியாள ரையும்- இங்கிலாந்து அரசாங்கத்தி னரையும் நடுங்க வைத்தவர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் வெறுப்புக்குள்ளானவர்கள், சுதந்திரம் பெற்ற இலங்கையில் கௌரவம் பெற்றுள்ளனர்; இது இயல்பானஒன்றே ஆகும். ஆங்கில காலப்பகுதியில் ஆதரிக்கப்பட்டவர்கள் தேசிய எழுச்சி யின் பின்னால் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள். அல்லது எதிர்முகா முக்குச் சென்றுள்ளார்கள். இதுவும் இயல்பான ஒன்றே ஆகும்.

இந்த இயல்புக்கு மாறாக, ஆங்கிலே யர்கள் கோலோச்சிய காலத்தில் ஆட்சி யாளருக்கு விரோதமானவராகவும்;

"பிரிட்டிஷாரே எச்சரிக்கை" என்று தனது பத்திரிகையில் எழுதியதன் மூலம், ஆட்சியாளருக்கு எதிராக மக்களைத் தூண்டியவராகவும்; கருதப் பட்டு, ஓரம்கட்டபட்ட நடேசய்யர், சுதந்திரம் பெற்ற இலங்கையிலும் கௌரவம் பெறவில்லை, சுதந்திரம் பெற்ற இலங்கையிலும் உரிமைக்காகப் போராடிய மலையகத் தமிழர்கள் மத்தியிலும் சிறப்பிக்கப்படவில்லை. இதன் காரணம் என்ன?

சிறகு முளைக்காததற்கு முன்பேயே பறவைக் குஞ்சுகளை பறக்க வைப்பதற்கு அவர் முனைந்தார் என்பதாலா?

எழுந்து நிற்பதற்கு முன்பேயே குழந்தைகளை ஓடவைப்பதற்கு அவர் பிரயத்தனித்தார் என்பதாலா?

ஆசை நிறைந்ததாலும் பாசம் மிகுந்ததாலும் தந்தை நிலையிலிருக்கும் ஒருவருக்கு இயல்பாக ஏற்படக்கூடிய பிரியவெளிப்பாடுகளை உரிய நிலையில் விளங்கி கொள்ளாததால் ஏற்படும் விளைவுகளைப் பிள்ளை நிலையி லிருப்போர் எதிர்கொண்டாக வேண்டி யது தவிர்க்கப்பட முடியாத ஒரு நிர்ப்பந்த மாகும்.

இந்தியத் தமிழர் இலங்கையில் தொடர்ந்து வசிப்பதையும் உரிமையற்ற நிலையில் வெறும் உடல் உழைப்பாளர்களாக இருப்பதையும் பலரும் விரும்பினர். ஆட்சியாளர், அரசியல்வாதிகள், தோட்டச் சொந்தக் காரர்கள், என்ற பலரும் இதற்கு விதிவிலக்கல்ல.

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகும் இந்த மனோபாவம் நீடித்தது.

இலங்கை அரசியலில் இந்திய வம்சாவளியினர் கவனம் காட்டிய ஆரம்ப காலத்தில் எதிர்ப்பு அதிகம் இல்லை. ஆங்கில ராஜ்யத்தின் கௌரவம் பெற்ற திவான் பகதூர் பெரைராவும், ஆங்கில பெண்மணியைத் திருமணம் புரிந்த பெரிசுந்தரமும் மந்திரிகளாகச் செயல்பட்டதை எவரும் பெரிதுபடுத்தவில்லை,

விபரீதம் ஏற்படத் தொடங்கியது. 1947 நாடாளுமன்றத் தேர்தலில், தமக்கிருந்த வாக்குப்பலத்தைப் பயன் படுத்தி எழுவரைத் தேர்ந்தெடுத்ததாலும், யூ.என்.பி அரசியல் கட்சிக்கெதிராக பதின்மரைத் தேர்ந்தெடுக்கத் தமது வாக்குகளைப் பயன்படுத்தியதாலுமே ஆகும் என்பது இன்று சகல மட்டத் திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இந்த கொடுமை நாடற்றவர்களாக ஒரு சமூகத்தினர் ஆக்கப்பட்ட கொடூரம் நடேசய்யர் இறந்த ஓராண்டு இடைவெளிக்குள் ஏற்பட்டது. நடேசய்யரின் பணியை விட்ட இடத்திலிருந்து எடுத்துச் செல்ல எவருமில்லாததால் ஏற்பட்ட இந்த இழிநிலையிலிருந்து மலையகம் மீள்வதற்கு இதுநாள் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

வரலாறு அறிந்தவர்கள் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி மாத்திரம் நினைத்துக் கொண்டிருப்பதில்லை, நடைபெறக் கூடியதை ஊகித்து நடைபெற வேண்டியதைத் தீர்மானித்து நடை பெறும் வழிவகைகளைச் சிந்திப்பர்.

தோட்டப்புற மக்களின் வரலாற்றை நுணுக்கி ஆராய்ந்த நடேசய்யர் அவர் களின் புன எழுச்சிகளைத் தூண்டு விக்கும் விதத்தில் பணிகளை ஆற்றினார். அவரது எழுத்துக்கள் ஆரம்பகாலத்தில் பத்திரிகை வாயிலாகவும் பின்னர் நூல்கள் வாயிலாகவும் மக்கள் எழுச்சிக்குப் பயன்பட்டன.

தமிழகத்தில் நவசக்தியிலும் தேசபக்தனிலும் வெளிவந்த அரசியல் எழுத்துக்கள் திரு வி.க அவர்களை இந்தியாவிலிருந்து நாடு கடத்தும் நிலைமைக்கு உள்ளாக்கியபோது அவரது சமகால அரசியல்வாதிகளின் தலையீட்டால் அது தவிர்க்கப்பட்டது. இலங்கையில் தேசநேசன், தேசபக்தன், தி சிட்டிஷன் என்ற ஏடுகளில் நடேசய்யரின் எழுத்துக்கள் அவருக்கு அத்தகு ஆபத்தை உண்டுவித்தப் போதும், தானே சட்டசபை உறுப்பினராக விளங்கியமையால் நாடு கடத்தும் அபாயத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடிந்தது. தமிழகத்தில் தமிழில் அரசியல் பேசவும் எழுதவும் முடியும் என்பதை 1917ல் திரு. வி.கவே செய்து காட்டினார் என்பார்கள். நடேசய்யர் திரு வி.கவை பல வழிகளில் பின்பற்றி நடந்து வந்தவர்; அவருக்கு கீழ் பணியாற்றியவர். இலங்கையில் தமிழில் அரசியல் கருத்துக்களை எழுதுவதற்கு பத்திரி கைகளை பயன்படுத்தியும் மேடைப் பேச்சுக்களை உருவாக்கியும் புதிய வழி சமைத்தவர் நடேசய்யர் ஆவார். தனது பத்திரிகைகளை வரலாற்றுப் பதிவேடுகளாக விட்டு சென்றுள்ள பெருமை அவருக்குண்டு. தோட்ட மக்கள் இன்று வரை சுதந்திர பிரஜைகளாக உருவாகவில்லை. அவர்களது வரலாறு முழுக்க அவர்களை பிறரில் சார்ந்திருக்கும் மக்களாகவே வெளிக்காட்டுகின்றது. ஆரம்பகாலத்தில் பெரிய கங்காணிகள் என்றும் பின்னால் தோட்டத்துரைமார்கள் என்றும் தற்போது தொழிற்சங்கள் என்றும் அவர்கள் தமது வாழ்க்கையைப் பிற சக்தியில் சார்ந்தியிருந்தார்கள்.

தொழிற்சங்கங்கள் உழைப்பாளர் களின் சக்தி மிகுந்த பாசறைகளாகும். மலையகத்தைப் பொறுத்த வரை இது உழைப்பாளர்களைத் திசைக் கொருவராகப் பிரிப்பதற்கே இன்று உதவியுள்ளது. இன்று பதினேழு தொழிற்சங்கங்கள் மலையகத்தில் செயல் படுகின்றன. இந்தப்பிரிவு நடேசய்யரின் காலப்பகுதியிலேயே ஆரம்பமாகி விட்டது. 1940 களில் பன்னிரெண்டு தொழிற்சங்கங்கள் மலை நாட்டில் செயல்பட்டன. ( ஆதாரம் - பிளாண்டர் ரிவ்யூ - பெப்ரவரி 1947)

மலையகத்தில் முதல் தொழில் சங்கத்தை நிறுவிய நடேசய்யர் இந்த ஒற்றுமையின்மையைக் கண்டு தனது இறுதிகாலத்தில் மனம்நொந்து போனார்.

மனிதர்களுடைய நிழலிலே மனிதனை காண முயல்வது இன்றை காலகட்டத்தின் தேவைகளில் ஒன்று

செயற்கரிய செயல்களை செய்து தமது தடத்தை விட்டுச் சென்று மனிதர்களுக்கு நினைவு தினம் கொண்டாடுவது இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வழிமுறையாகும். இன்னும் ஒரு படி மேலேச் சென்று அவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் அமைத்தும், சிலைவடித்தும், நினைவாலயங்கள் எழுப்பியும், ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைத்தும் இந்த முயற்சிகள் பல விதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் செல்வாக்கும் ஆட்சி யாளரின் ஆதரவும் பெறக்கூடிய நேரத்தில் அவைகள் கல்லூரிகளாக உருவாவதற்கும் பல்கலைக்கழகங்களாக உருவெடுப்பதற்கும் வழி பிறப்பதுண்டு.

நடேசய்யரின் நூற்றாண்டில் இந்த வழியில் சிந்தித்து செயல்பட வேண்டியது மலையகத் தமிழரின் கடமையாகும். நன்றி மறந்தவர்களாக காணப்படும் எந்த ஒருவருமே வாழ்க்கையில் மிளிர்வதில்லை; ஒரு சமுதாயத்தின் வளமும், வளர்ச்சியும் இந்த போக்கிலேயே அமைகின்றன.

விரைவில் குடியரசு நாடாக மலரப்போகும் மொரிஸியஸ் தீவில், தமது வளர்ச்சிக்குத்துணை நின்றவர் களில் ஒருவராக மகாத்மாகாந்தியைப் போற்றும் மக்கள் அவர் நாட்டுக்கு விஜயம் செய்த 90 ஆண்டுகளை நினைவுபடுத்தும் விதத்தில் இந்தாண்டு நவம்பரில் நான்கு நாட்களுக்கு வண்ணமிகு நிகழ்ச்சிகளை நடாத்தி நன்றி செலுத்தினர்.

மலையகத்தில் இன்று பூத்துக்குலுங்க ஆரம்பித்திருக்கும் மலர்ச்சிக்கு வித்திட் டவர் கோதண்டராம நடேசய்யர் அவர்கள்.

அவரது நூற்றாண்டு நினைவின் போது நன்றி மறந்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உட்படாதவர்களாக மலையக சமூகத்தினர் செயற்படுவார்கள் என்று நம்புவோமாக.

## டீமேக்கர் ஐயா.

தேனீயாய் அங்குமிங்கும் திரிந்தலைந்து தொழிற்சாலைத்
திக்கெட்டும் சுற்றிவரும் "டீமேக்கர் - ஐயா!
ஏணிப்படி படபடக்க ஏறியோடி நடைநடந்து
"என்னா மூக்கன் இங்கேவாரும் " என்பார்! - மெத்தையில்
தூணின்மேலே சாய்ந்துநின்று துண்டுபீடி "டம்மடிக்கும்"
தோழரவர் நடுநடுங்கி வருவார்! - "வாவா!
ஆணியொன்று கழண்டுபோச்சி! அடுப்புவேலை நிண்டுபோச்சி!!
ஆபீசுக்குப் போயிவாரும்" என்பார்!

நோட்டம்விட்டுத் தளிரைக்கையில் நூதனமாய்ப்பிடித்தழுத்தி
நொண்டிச்சுப்பன் இங்கேவாரும்" என்பார்! - கொழுந்து
வாட்டமில்லே! காத்தாடியை வடிவாப்போடுநேத்துரவு
வாச்சர் எங்கே போனான்?" என்று கேட்பார்!" - காம்பு
நீட்டம் கூட முத்தஇலை நெறையருக்கு கங்காணிக்கு
நேத்தும் சொல்லிக் கேக்கலியே" என்பார்! - மெத்தையில்
வாட்டம்பார்த்துக் கீழிறங்கி வந்துரோலர் முன்னிருந்து
வளைந்தரைக்கும் வேகத்தையும் பார்ப்பார்!

அடுப்புப்படி மேலேநின்று அனல்வேகம் பார்த்தபின்னே
அங்கிருக்கும் "மீட்டரையும் பார்ப்பார்! - "ஏய்!
கொடுக்காப்புளி! அரைத்ததூளைக் கொண்டுபோயி "கூலிங்ரூமில்"
கொட்டிநன்கு பரப்பிவிடு! என்பார்! - "போபோ!......
கிடுகிடெனப் போடுதூளை கிட்டநிண்டு தள்ளிவிடு!
கீழேமேலே சிந்தாதே நீ!" என்பார்! - அடுப்பில்
மடமடென தட்டுசுற்றும் மகிழ்வுடனே பார்த்திருந்து
மற்றவேலை பார்க்கநன்றே செல்வார்!

சிவ்டிங்ரூமில்" சென்று நிற்பார் செல்லம்மாவும் கண்ணசைப்பாள்
'சேம்பிள் டஸ்டைக் கொஞ்சம்எடு!" என்பார்! - "நாளைக்கு
"விசிட்டிங்ஏஜண்ட்" வந்திடுவார் வெரசாவேலை முடிக்கவேணும்
வெள்ளையம்மா சலிக்கவேண்டும்" என்பார்! - பி.ஒ.பி
"டெஸ்ட்கப்பை"உறிஞ்சிப்பார்த்து "டேஸ்ட்வெரிகுட்டு" என்று
வேகமாகச் சுற்றிவந்தே நிற்பார்! - வந்த
"விசிட்டருக்கு "கொடுக்க "பெனிங்ஸ்" ரெண்டுபக்கட் அனுப்பு"மென்று
வேலைசொல்லி வீட்டுக்கவர் நடப்பார்!

சாயம்போன சக்கையாகிச் சாம்பல் வாழைத் தூரில்போட்ட
சங்கதியாய் ஆகுமுன்னே டீமேக்கர் - இந்தக்
காயம்இடு காடுபோகும் காலத்துக்கே முன்னயவர்
கவனமாக உழைக்கவேணும் என்பார்! - யந்திரம்
ஒயுமட்டும் ஓடியாடி உழைத்த பின்னே வாழ்க்கையிலே
ஒன்றுமில்லை என்று ஏங்கிநிற்பார்! -முருங்கைக்
காயைப்போல உடல் சிறுத்து கருப்புக்கோட்டு சூட்டுமாகிக்
களையிழந்த கோலத்திலே போவார்.

க.ப.லிங்கதாசன்

# மலையக பத்திரிகைத்துறை முன்னோடிகள்

## 'செய்தி'

# ரா.மு.நாகலிங்கம்



கே.எஸ்.ராஜூ

*"நல்லதை நினைப்போம்*
*நல்லதை செய்வோம்*
*நற்பெயரெடுப்போம்*
*நல்வாழ்க்கை வாழ்வோம்"*

இந்த நினைவோடும், செயலோடும், நல்ல பெயரோடும் நல்வாழ்வு வாழ்ந்து வருபவர் செய்தி' ரா. மு. நாகலிங்கம் அவர்கள்.

மலையக பத்திரிகையாளர்களில் முன்னோடியாக விளங்கும் திரு. ரா. மு. நாகலிங்கம் அவர்கள் 'குன்றின் குரலுக்காக' பேட்டி காணும் பொருட்டு புத்தாண்டுக்கு முதல் நாள் மதுரைக்கு சென்று அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

செய்தி வெளிவந்த காலத்தில் என்ன சுறுசுறுப்போடு, துடிப்போடு, வெடிப் புறும் பேச்சோடும் செயல்பட்டாரோ அதே போல அவர் இன்னமும் இருப்பது எனக்கு ஆச்சரியம் தான்.

அவரது வாழ்க்கை அனுபவங்கள், பணிகள் அனைத்தையும் நினைவு கூர்ந்தார். மதுரையில் அண்ணா நகரிலிருந்து திருமங்கலம் வரை ஆட்டோவில் சென்று திரும்பும்போது ஆட்டோவிலேயே எங்கள் நேர் காணல் நிகழ்ந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் ஒரு பத்திரிகையாளராக திகழ்ந்தார் என்பது குறித்து எழுதுவதற்கு முன்னால் அவர் ஒரு வர்த்தகராக - தொழில் அதிபராக இருந்தார் என்பதை குறிப்பிட வேண்டும்.

அறுபதில் இலங்கை வானொலி விளம்பரத்தில் ஒரு பெயர் பிரபலமாக ஒலிபரப்பாகும். அமரர் மயில்வாகனன் குரலில் இந்த பெயர் ஒலித்தது. 'ஜெகஜோதி' என்ற அந்த பெயரில் ஒரு நிறுவனத்தில் தயாராகும் பல்பொடி, ஊதுபத்தி முதலான பல பொருட்கள் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருந்தன. அது இவரது நிறுவனம் தான்.

கைத்தொழில் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல தொழில் நிறுவனங்களை நடத்தி வந்தார்.

கண்டியில் பிரபல வர்த்தகராக விளங்கிய அவர் 1941இல் புசல்லாவில் ஒரு ஜவுளிக் கடையில் ஊழியராக அமர்ந்தார். தன் அயராத உழைப்பின் மூலம் படிப்படியாக உயர்ந்து பிரபல வர்த்தகரானார்.

வர்த்தகத்தோடு நின்று தன் வாழ்க்கையை முடக்கிக் கொள்ளாமல், கலை, இலக்கிய, சமூகப்பணியிலும் தன்னை முடுக்கி விட்டு பல்வேறு பணிகளைச் செய்தார் என்பதை குறிப்பிட வேண்டும்.

புசல்லாவில் 1942ல் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் பெயரிலே நேத்தாஜி வாலிபர் சங்கம் ஒன்றை அமைக்கத் தொடங்கியதன் மூலம் இவரது சமூகப் பணி ஆரம்பமாகியது. அச்சங்கத்தின் மூலம் மலையக இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தப்பாடு பட்டார்.

பின்னர் காந்தியத்தில் பற்றுக் கொண்டார். அண்ணலின் அஸ்தி இலங்கை வந்த போது, புசல்லா வட்டார மலையகத் தொழிலாளர்களின் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்தார்.

மலையக மக்களின் மறு மலர்ச்சிக்காகவும் விழிப்புணர்ச்சிக் காகவும் பாடுபட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர். 'மலைநாட்டுக் காந்தி' என்றழைக்கப்பட்ட அமரர் ராஜலிங்கம் அவர்களோடு கொண்ட தொடர்பின் காரணமாக பொதுப்பணிகளில் ஈடுபடத் தொடங்கியவர் ரா. மு. நா அவர்கள்.

1949இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்ட செயலாளராக கடமையாற்றினார். அப்போது அப்பகுதிக்கு விஜயம்

செய்த பூமிதான இயக்கத் தந்தை அமரர் ஆச்சாரியர் கிருபாளனி அவர்களுக்கும், அவரது துணைவியார் சுஜாதா கிருபாளனி அவர்களுக்கும், டாக்டர் சுப்பராயன் தம்பதிகளுக்கும் ஊர்வலம் நடத்தி சிறப்பான வரவேற்பு கொடுத்ததை மனம் நெகிழ நினைவு கூர்ந்த ரா. மு. நாகலிங்கம் அவர்கள் மேலும் தமிழகத்தின் புரட்சித் தலைவர்களாக இருந்த எஸ். ஏ. ரஹீம், தோழர் ப. ஜீவானந்தம் முதலியோருக்கும் சிறப்பான வரவேற்பு கொடுத்ததை மன மகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்தார்.

அந்த கால கட்டத்தில் தான் தாம் பத்திரிகைத்துறையில் அடியெடுத்து வைத்ததை நினைவு கூர்ந்தார். கம்பளை - புசல்லாவில் காங்கிரஸ் இருந்தபோது 'நவஜீவன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அமரர் கேராஜலிங்கத்தின் சகோதரர் சங்குவாரி நண்பர் திரு. கா. சின்னையாவுடன் இணைந்து இதை ஆரம்பித்தார். பின்னால் இது காலஞ்சென்ற கே. எஸ். காளிமுத்து அவர்களை ஆசிரியராக கொண்டு நீண்ட காலம் வார இதழாக வெளி வந்த, பின்னர் நின்று விட்டது.

இவர் சமூகப்பணியாற்றியதை விட பத்திரிகைத்துறையின் மூலம் ஆற்றிய கலை, இலக்கியப்பணியே இவருக்குப் பெயரை தந்ததோடு சான்றோர் பலரின் நட்பையும், அன்பையும் பெற்று தந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

## செய்தியின் பொற்காலம்:

அறுபதுகளில் தான் மலையகத்தில் ஒரு மறுமலர்ச்சியே தோன்றியது. இளைஞர்கள் மத்தியில் புத்தெழுச்சி பிறந்தது பல்கலைக்கழகத்திற்கும் சென்றும் படிப்பது என்று பலர் தமது மேற்படிப்பைத் தொடர்ந்தனர். பட்டம் பெற்று வெளியே வந்தனர். சமூக வாழ்வில் பலர் ஈடுபடத் தொடங்கி மலையக -மக்கள் விழிப்புணர்வுக்கும் வித்திட்டு பாடுபடத் தொடங்கினர். இந்த கால கட்டத்தில் தான் சின்னஞ் சிறிய பத்திரிகைகள் புற்றீசல்கள் போல வெளி வரத் தொடங்கின. அப்போது தான் - இந்த பத்திரிகை நட்சத்திரங்களுக்கு மத்தியில் பௌர்ணமி நிலவாய் 'செய்தி' பத்திரிகை ரா. மு. நாகலிங்கம் அவர்களால் தொடங்கப்பட்டது.

கொழும்பிலிருந்தும், பின்னர் கண்டியிலிருந்தும் நடத்திய இப் பத்திரிகையை அவர் மலையகம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நிறுத்திக் கொள்ளவில்லை. இதை ஒரு தேசிய ஏடாகவே கொண்டு வந்தார். 'செய்தி' மலையக மக்களின் விழிப்பிற்கும், கலை, இலக்கிய உலகிற்கும் பெரும் சேவையாற்றியதோடு "ஈழத்து" இலக்கிய வளர்ச்சிக்கும் - ஏன் - தாய் தமிழ் நாட்டின் கலை - இலக்கிய உலகிற்கும் ஒரு பாலமமைத்தது என்பதை கூறாமல் இருக்க முடியாது.

செய்தி அரசியல், பொருளியல், சமூகவியல், இலக்கியம் சம்பந்தப்பட்ட ஆய்வுப் பூர்வமான ஆக்கப்பூர்வமான கட்டுரைகளை வெளியிட்டது. இதன் மூலம் பல இலங்கை வாழ் எழுத்தாளர்கள் சிறப்புப் பெற்றார்கள்; சர்ச்சைக்குள்ளானார்கள் என்று கூட சொல்ல வேண்டும். கலை, இலக்கிய உலகில் செய்தி களம் அமைத்துக் கொடுத்த அந்த காலக் கட்டம், இலக்கிய உலகில் ஒரு சிறப்பான கால கட்டமாக அமைந்தது என்றே சொல்ல வேண்டும்.

'ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி', 'சில அவசர குறிப்புகள்' என்ற மு. தளைய சிங்கம் எழுதிய தொடர் கட்டுரைகள் 'ஈழத்து இலக்கிய உலகில்' பெரிதும் சர்ச்சைக் கிளப்பியதை நினைவு கூரவேண்டும்.

நாராயணதுரைக்கண்ணன் போன்ற மணிக்கொடி காலத்து எழுத்தாளர்கள் முதல் பல தமிழக எழுத்தாளர்களின் எழுத்துக்களும் செய்தியில் இடம் பெற்றன.

செய்தி மூலம் செய்த பணிகளை விவரித்த போது அதில் பணி செய்தவர்களையும், அவர் நினைவு கூர்ந்தார். அதில் ஆசிரியராக இருந்த மறைந்த சட்டத்தரணி பெரி. சுந்தரலிங்கம், கு.இராமச்சந்திரன், ஞா.மகாதேவா ஆகியோர்கள் தன்னோடு உழைத்ததையும், அவர்களது சிறப்பான பணிகளை மனம் விட்டு பாராட்டினார்.

செய்தியில் சில காலம் உதவி ஆசிரியராக நான் பணி செய்ததையும், சுட்டிக் காட்டினார். ஆரம்பத்தில் செய்திக்கு தொடர்ந்து எழுதத் தொடங்கினேன். கு.இராமச்சந்திரன் ஆசிரியராக இருந்த கால கட்டத்தில் 'கேட்டீர்களா சேதி' என்ற பகுதி வெளி வந்தது. அதை தொடர்ந்து எழுத எனக்கு வாய்ப்பளித்தார். பின் ஞா. மகாதேவா 'நெடுந்தூரம்' என்ற எனது நாவலை தொடர்ந்து வெளியிட்டதோடு, பலவகையில் வாய்ப்புகளை அளித்தார். பின்னர் ரா.மு.நாகலிங்கம் அனுமதியோடு உதவி ஆசிரியராக நியமித்துக் கொண்டார். செய்தியில் எனக்கு கிடைத்த அனுபவங்களை - கிடைத்த பயிற்சி தான் என்னையும் ஒரு பத்திரி கையாளனாக மாற்றியது - பின்னாளில் தமிழகத்தில் 'மக்கள் மறுவாழ்வு' மாதப் பத்திரிகையை 10 ஆண்டுகளாக திறம்பட நடத்த முடிந்தது என்றால் அது 'செய்தியில்' கிடைத்த அனுபவங்கள் தான்.

செய்தியில் நான் இருந்த கால கட்டத்தில் செய்தி மிக சிரமத்தில் நடந்துக் கொண்டிருந்தது. ரா.மு.நாகலிங்கம் அவர்களின் வர்த்தகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள், பிரச்சினைகள் 'செய்தி' யையும் விட்டு வைக்கவில்லை. அத்துணை சிரமங் களுக்கு மத்தியில் 'செய்தியை' விடாது நடத்த வேண்டும் என்று அவர் எடுத்துக் கொண்ட விடாமுயற் சியையும், அடைந்த சிரமங் களையும் நான் அறிவேன். அத்தருணத்தில் அவருக்கு இருந்த விடாமுயற்சி, வேட்கையை பாராட்டாமல் இருக்க முடியாது.

## மலையக மறுமலர்ச்சிக்கு

செய்தி பத்திரிகையின் மூலம், மலைய மக்களுக்கு திரு. ரா. மு. நாக லிங்கம் அவர்கள் செய்த சேவை அளப்பரியது. மலையக மக்கள் தங்கள் நிலைமைகள் குறித்தும் - உரிமைகள் குறித்தும் - முன்னேற்றம் குறித்தும் உணர்ந்து பார்க்கும் விதத்தில் விழிப்புணர்ச்சி தரும் கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டார்.

குடியுரிமைப் பிரச்சினைகள் குறித்தும், அதில் மலையக மக்கள், எடுக்க வேண்டிய நிலைபாடுகள் குறித்தும், "ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி தாம் எந்த நாட்டை தேர்ந்தெடுக்கலாம் என்பது குறித்தும் கட்டுரைகள் - சர்ச்சைகளை வெளியிட்டும், பலவகையில் மலையக

மக்களுக்கு வழி காட்டியாக திகழ்ந்தார் என்பதும், மலையக வரலாற்றில் இடம் பெற வேண்டியதாகும்.

மலையகத்தில் பல எழுத்தாளர், கவிஞர்கள் தோன்றும் வகையில் செய்தியில் புதிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு அளித்ததன் மூலம் மலையக எழுத்துலகிற்கு, அவர் செய்த தொண்டினை மறுக்க முடியாது.

மலையகப் பத்திரிகைத்துறையில் முன்னோடியாகவும், எழுத்துலகில் தனது பங்கினை அவர் செய்ததன் பலனாக, மலையக எழுத்தாளர் மன்றத் தலைவராக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மலை நாட்டு எழுத்தாளர் மன்றத்தை அன்றைய வீரகேசரியில் பணியாற்றிய எஸ். எம். கார்மேகம் முதலானவர்களின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக இருந்து, மன்றத்தின் மூலமாகவும், செய்தி ஏட்டின் மூலமாகவும் சுமார் 10 ஆண்டு காலம் மலையக எழுத்துக்கும் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும் தன் பங்கினை திரு.ரா.மு. நாகலிங்கம் அவர்கள் அளித்தார்கள்.

மலையகத்தின் முன்னோடி எழுத்தாளரும், இலங்கையில் சிறந்த ஆங்கில எழுத்தாளருமான அமரர் ஸி.வி. வேலுப்பிள்ளையுடன் பலகாலம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரது ஆக்கங்களை நூலுருவில் கொண்டு வருவதற்கு இயன்ற உதவிகளை செய்ததை நினைவு கூர்ந்தார். முதலில் ஆங்கில மொழியிலும், பின்னர் ரஷ்ய மொழியிலும் வெளிவந்த ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற அனைவராலும் புகழப்படும் கவிதைத் தொகுப்பை சக்தீ ஏ.பாலையா அவர்கள் தமிழில் மொழி பெயர்த்ததை நூலுருவில் வெளியிட்டார்.

கவிஞர் சில்லையூர் செல்வராசன் அவர்களின் 'தணியாத தாகம்' என்ற நூலினை அச்சிட்டு, அமரர் தனி நாயகம் அவர்கள் தலைமையில் கண்டி சைவ மகா சபையில் வெளியிட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

'செய்தி' பத்திரிகையின் மூலம் இலக்கிய - தொழிற் சங்கத்துறையில், இவர் ஆற்றிய பணி இவருக்கு இலக்கிய உலகிலும், தொழில் சங்கத்துறையிலும் நூற்றுக்கணக்கான அறிஞர்கள், கவிஞர்கள், சான்றோர்களின் நட்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதை நெஞ்சம் நெகிழ தெரிவித்தார்.

## பாவேந்தர் பாரதி தாசனோடு

ஈழத்து இலக்கிய உலகிலும், மலையக இலக்கிய - சமூகத்தவர்கள் மத்தியில் உலா வந்த ரா.மு.நாகலிங்கம் அவர்கள் தமிழகத்தின் அறிஞர் பெருமக்களோடு தொடர்புகள் வைத்திருந்தார்கள்.

"பாகு நின்ற தெனப் பேசும்
பண்பாளச் செம்மை
நாகலிங்கம் காட்டும்
நயம் கண்டேன் நாகமுறும்
அன்பு கண்டேன் வாழ்க"

இப்படி, 1951ல் சந்தித்து நட்பு கொண்ட போது கலைமகள் ஆசிரியரும், தமிழறிஞருமான அமரர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் தனக்கு பாமாலை சூட்டியது தாம் பெற்ற பேறு என்றார்.

1963 இல் பாரதிதாசன் அவர்களை சந்தித்ததையும், பின் அவரோடு தொடர்புகள் வைத்திருந்ததையும் பெருமையோடு தெரிவித்தார். 1964ல் பாவேந்தர் மறைந்த போது, மறைந்த தமிழ் எழுத்தாளர் அகிலன் அவர்களோடு சென்று அஞ்சலி செலுத்தினார். பாரதிதாசன் குறித்து பல தகவல்கள் அவரிடம் கேட்டு தெரிந்து வைத்துள்ளது வியப்பாக இருக்கிறது.

1953களில் கலை உலகத் தொடர்பில் ஏற்பட்ட பயனால், டி.கே.எஸ். சகோதரர்கள் அமரர் டி.கே. ஷண்முகம் டி.கே.பகவதி நட்பு கிடைத்தது.

ம.பொ.சி.யோடு மலையக சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

முதல் உலக தமிழ் மகாநாட்டின் போது அமரர் அறிஞர் தனிநாயகம் அடிகளோடு இந்திய ஜானாதிபதியாக இருந்து மறைந்த தத்துவஞானி ராதா கிருஷ்ணன் அவர்களை சந்தித்தார்.

இன்னும், சோ. சிவபாதசுந்தரம், கு.அழகிரிசாமி, நாராயண துரைக் கண்ணன், மாயாவி, ரஸவாதி, சிதம்பர ரகுநாதன் என்று பலரை நினைவு கூர்ந்து அவர்களோடு கொண்டிருந்த நட்புறவு குறித்து தெரிவித்தார்.

1952இல் சென்னையில் நடந்த தமிழ் விழாவில் கல்கி கிருஷ்ண மூர்த்தி அவர்களின் அழைப்பை ஏற்றுக் கலந்து கொண்டார். கல்கி டி.சதாசிவம், ராஜாஜி, திரு.வி.க., தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர்ரை சந்தித்ததையும் பசுமையான நினைவுகள் என்றார். உலகம் சுற்றும் தமிழனாக திகழ்ந்து தமிழர்கள் மற்றும் தாம் சென்ற நாடுகள் பற்றி பல கட்டுரைகள் எழுதிய ஏ.கே. செட்டியார் அவர்கள் கொழும்பு வந்த போது சந்தித்தார்கள்.

இந்தியா மட்டுமல்ல; மலேசியா இலக்கிய விற்பனர்களோடு தொடர்புகள் வைத்திருக்கிறார்.

எழுத்தாளர் தலாத்துஓய கே.கணேஷ் வீரகேசரி ஆசிரியராக இருந்து, பின்னாளில் ஈழநாடு ஆசிரியராக இருந்த கே.பி.ஹரன், ஈழகேசரி அரியரத்தினம் ஆகியோருடன் கொண்டிருந்த நட்பு இன்னும் கைலாசபதி, அறிஞர் அ. ந. கந்தசாமி முதலானோருடன் இலக்கியத் தொடர்புகள் கொண்டிருந்தார்.

1969 இல் ஜனவரி 31ல் தனது மூத்த மகள் சாந்தாவுக்கும் மலையக கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு எடுத்து கல்வி இயல் பற்றி நூல்கள் எழுதிவரும் இலங்கை அரசினரால் ஊவா மாகாண கல்விமானாகவும் சிறப்பிக்கப்பட்ட விரிவுரையாளர் சோ.சந்திரசேகரனுக்கும் நடந்த திருமணம் பற்றி குறிப்பிட்டார். அத்திருமணத்தின் போது இ.தொ.காங்கிரஸின் தலைவரான திரு. தொண்டமான் அன்றைய நிதி மந்திரியும், இன்றைய சப்ரகமுவ மாகாணத்தின் கவர்னராகவும் இருக்கும் திரு. எஸ். விமலசேன அவர்கள், அன்றைய இந்திய உதவி தூதுவர், திரு.வே. அண்ணாமலை இர, சிவலிங்கம் முதலாக பல தமிழ், சிங்கள அரசியல், இலக்கியம், வர்த்தகப் பிரமுகர்கள் வருகை தந்து சிறப்பித்தது தன் பணிக்கு கிடைத்த மரியாதை என்று தெரிவித்தனர்.

## சான்றோர்களுக்கு விழாக் கண்டவர்.

சமூகத் தொண்டு, இலக்கியப் பணிகளில் கவிஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் விழா பல கண்டவர் ரா.மு.நாகலிங்கம் அவர்கள்.

அமரகவி பாரதியாருக்கு ஒவ்வொரு வருடமும் கண்டியில் விழா எடுக்கத் தவறியதில்லை.

1951ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் மத்திய மாகாணத் தமிழ்ச்சங்கம் பிரதி நிதியாக கலந்து கொண்டார்.

1952ல் சென்னையில் நடைபெற்ற தமிழ் விழாவிலும் பங்கு கொண்டார்.

1966ல் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவர்களுக்கு மணிவிழா நடந்தது. சென்னையில் அதற்காக நியமிக்கப்பட்ட மணிவிழா குழுவில் ரா.மு.நாகலிங்கம் அவர்கள் இடம்பெற்றார். அதையொட்டி தமது செய்தி பத்திரிகையின் மூலமாக மணிவிழா மலரொன்றை அமைச்சர் திருச்செல்வத்தின் மூலமாக வெளியிட்டு கண்டியில் பெரும் விழா ஒன்றை எடுத்தார். ஊர்வலம் நடத்தி இரண்டு நாட்கள் இவ்விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் பல அமைச்சர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அந்தவிழாவில் மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு தங்கப்பதக்கம் அளித்து கௌரவித்தார்.

திரு.ரா.மு. நாகலிங்கம் அவர்கள் செய்தி மூலமாக இன்னொரு சிறப்பான பணியை செய்ததை நினைவு கூராமல் இருக்க முடியாது தமிழில் நாடகத் தந்தையாக போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகளுக்கு சிறப்பு மலரொன்றை வெளியிட்டு கண்டியில் நூற்றாண்டு விழா கண்டது மூலம் நாடக உலகிற்கு அவர் செய்த பெரும் தொண்டு குறிப்பிடவேண்டும். தமிழில் சிறுகதை மன்னராக விளங்கிய புதுமைப் பித்தனுக்கு விழாக் கண்டார். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளராக விளங்கிய கு.அழகிரிசாமி, அமரகவி பாரதியாரின் பேத்தி விஜயபாரதி, அவரது கணவர் சுந்தரராஜன் ஆகியோர் அவ்விழாவில் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

## தொண்டு செய்வது அவரது குணம்.

திரு.ரா. மு. நாகலிங்கம் அவர்கள் செய்த சமூக இலக்கிய பணிகளுக்கு அவர் சேகரித்து வைத்திருக்கிற செய்திகள், நூல்கள் சான்றோர்களின் மடல்கள் சான்று பகரும்.

1983ல் திரு.ரா.மு.நாகலிங்ம் அவர்கள் தாம் வாழநாள் முழுவதும் சேகரித்து வைத்திருந்த புத்தகங்கள் முழுவதையும் மலையகப் பாடசாலையொன்றுக்கு அன்பளிப்பு செய்தமை தொண்டு செய்வதில் அவருடைய குணத்திற்கு சான்று காட்டுவதாகும்.

சுமார் நாற்பது ஆண்டு காலம் மலையக கலை - இலக்கிய சமூக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார். தமிழகம், இலங்கை சிங்கப்பூர்,மலேசியா இன்னும் பரந்த பட்டு தமிழர் வாழும் நாடுகளுக்கும் கலை, இலக்கிய பாலமைத்து மலையக எழுத்துக்கும் மக்கள் சமூகத்தின் விழிப்பிற்கும் செழுமை சேர்ந்தார்.

"தாம் செய்த பணிகள் எழுத்துக்கள் எதையும் நூலுருவில் எழுதி வைக்கத் தவறிவிட்டோமே" என்று வருந்தும் இவர் மேலும் " வாழ்க்கையின் பெரும்பகுதி பிரச்சினைகளில் போராட்டங்களிலேயே கழிந்து விட்டது. இப்போது முதுமையில் ஆரம்பக்கட்டத்தில் இருந்தாலும் இன்னும் ஏதாவது செய்யவேண்டு மென்றே விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

அந்த விருப்பத்தை உறுதிபடுத்தும் வகையில் "கவிதா" என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை ஆரம்பித்து நூல்கள் வெளியிடுவதில் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். அப்பதிப்பகத்தின் மூலம் சில நூல்களும் வெளியிட்டுள்ளார்.

அவரது முயற்சிகள் வெல்ல வேண்டும் என்று புத்தாண்டு வாழ்த்துக் கூறி விடைபெற்றேன்.

## என் கவிதை அழுகிறது !

உன் இளமையைத்
திருடிக் கொண்டுதான்
தேயிலை
இளங் கொழுந்துகளைத்
தருகிறதோ!

தேகத்தில் கூடை
கூடைக்குள் தேசம்
மனதுக்குள் சோகம்
சுமக்கும் பெண்ணே!

உன் சோகம்
சொல்லும் போதே ........
என் கவிதை அழுகிறது!

சங்கொலிக் கேட்டுப்
பொழுது விடிந்து விட்டதாய்
விழித்தெழும் ......... நீ
வாழ்வில் விடியலைக் காண
விழித்தெழவில்லையே!

உனக்கும் விடியாதா ...?
நினைக்கும் போதே ....
என் கவிதை அழுகிறது!

நாட்டின் பிரச்சினைகளை
நீ பேசுகிறாய்
நாடு உன்னைப் பேசுவதாய்
இல்லையே!

பிரச்சினைப் போக்கும்
நீயே! ..... இப்போது
நாட்டுக்குப் பிரச்சனையாய்!

எட்டிக் காம்பராவுக்குள் – உன்
இளிச்சவாய்த் தனத்தைக்
கண்டு விட்டதால்
இங்கே ........
கதைகளில் கவிதைகளில்
மட்டுமே
உன்னில் கரிசனை!

கண்ணீரில் மட்டும்
கதைகள் சொல்லும்
உனக்காக
என் கவிதை அழுகிறது.

கோணமுட்டாவ
இரா. இராஜகோபால்

# மறக்க முடியவில்லை

- சாந்தாராஜ் -

களைத்து விடு திரும்பிய நான் அம்மா கொடுத்த தேநீர்க் கோப்பையை கையில் ஏந்தியவாறு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டேன்.

"தேவி! முதலில டீயக் குடிம்மா. அப்புறமா யோசிக்கலாம்"

அம்மா ஞாபகமூட்ட வழக்கம் போல தேநீரை அருந்தும் போது அம்மாவின் கைப்பட்டு சுவை கூடியதை எண்ணி வியந்துப்போகிறேன். உதடுகள் தேநீரை உறிஞ்சும் வேளையில் என் மனம் ஆழ்ந்த சிந்தனையில் லயித்துப் போகின்றது.

நான் அன்றாடம் காணும் தேயிலைச் செடிகளால் அழகுபெற்ற பசுமலைத் தொடர்கள்...... பசுமையாக்கிச் சென்ற உழைப்பாளிகளின் உயர்வைக் காட்டுவதை போன்ற அவற்றின் கம்பீர தோற்றம்.... மலைச்சரிவுகளில் தோள்களில் கூடையைத்தாங்கியவாறு தளிர் கொய்யும் பெண்கள்......... வெகுலாவகமாக கொழுந்தைக்கொய்து கூடையை நிரப்பும் அந்த கரங்களின் வேகம் வியக்க வைக்கின்றன. ஒப்பற்ற அவர்களின் உழைப்பினால் மணமும், சுவையும்பெற்ற என்னைப் போன்ற எத்தனையோ உயிர்களின் களைப்பைப் போக்கிவரும் இந்தத் தேநீருக்கு ஈடேது. நாள் முழுதும் பட்டினியால் வாடும் ஒருவனுக்கு ஒரு கோப்பை தேநீர் தரும் நிறைவு...... ஆனால் அந்த நிறைவைத்தரும் தொழிலாளியின் வாழ்வில்தான் எத்தனை அவலங்கள். அவல நிலைக்கு ஆளாகி அல்லலுற்ற என்னுயிர்த் தோழி சீதாவின் நினைவுநாளின்று. சரியாக பத்து வருடங்களுக்கு முன்னால் நடந்து முடிந்த என் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு சோக காவியம்.

ஓ! நானும் அவளும் ஒன்றாகப் பள்ளிச் சென்ற அந்த இனிமையான நாட்கள்....! உயிரிலே கலந்த மறக்க முடியாத அன்பு உரையாடல்கள்........! அவளின் ஏழ்மைச் சூழ்நிலை அவளின் படிப்பைத் தொடர தடையாக இருந்தது. நான் படிப்பைத்தொடர்ந்தேன். தொழிலும் பெற்றேன். ஆனால் எங்கள் நட்பு தொடர எந்தத் தடையுமிருக்கவில்லை. என் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் தன் வளர்ச்சியாகக் கொண்டு மகிழ்ந்துப் போவாள் என்தோழி. தனக்குக் கிட்டாத கல்வி, உத்தியோகம், வசதியான வாழ்க்கை எனக்குக் கிடைத்ததில் நிறைவு கண்டாள் அன்பு சீதா. அவள் மனத்துயர் தீர்க்கும் உயிர்த்தோழியாக என்னை மதித்து அவள் தன் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஒன்று விடாமல் விவரித்துச்சொல்வதை இன்று நினைத்த போது நானே அவளாகி அவள் கதையின் நாயகியாகி நெஞ்சுருகிப் போகிறேன்.

* * *

"இன்னிக்கும் போன காரியோ சரவரலீங்களா.....? களச்சி போயி வந்திருக்கீங்களே......"

சோர்ந்து விடுதிரும்பிய கணவனின் முகத்தைப்பரிதாபமாகப் பார்த்துக் கேட்கிறாள் சீதா.

"இல்ல சீதே போய்வார செலவுதான் மிச்சம். அவங்களுக்கு நம்ம நெலம எங்க தெரியப் போவுது. என்ன இருந்தாலும் ஒன்ன இங்கேயே வுட்டுட்டு நா மட்டு தனியா ஊருக்குப் போவப்போறதில்ல..... ஆமா.....!"

அவள் துயர் துடைக்கும் தொனியில் சொன்னான் ராமு.

"கொஞ்சமிருங்க தேத்தண்ணி ஊத்திக்கிட்டு வாரே"

உள்ளே திரும்பிய சீதாவைத் தொடர்ந்து குசினிக்குள் போனவன் அடுப்புப் பக்கத்திலேயே ஒரு பலகைக் கட்டையை போட்டு உட்கார்ந்து விட்டான். அடுப்பை ஊதிவிட்டு அவனெதிரே கால்களைச் சற்று மடக்கிப் பிடித்தவாறு உட்கார்ந்தாள் சீதா. ஐந்து மாதக்கர்ப்பிணியான தன் மனைவியின் கவலைப் படிந்த முகத்தைப் பார்க்க ராமுவுக்கு பெருத்த வேதனையாக இருந்தது.

"அட மறந்தே போயிருச்சி சீதா. இரு வாரே...."

சட்டென ஏதோ நினைத்துக் கொண்டவனாக முன் காம்பிராவிலேயே வைத்துவிட்டு வந்த சிறு பொட்டலத்தை எடுத்து வந்தான்.

"இந்தாம்மா சீதா நீ ஆசையா சாப்பிடுவியேனு வாங்கிட்டு வந்தேம்மா"

அவளுக்காக டவுனில் வாங்கி வந்த இனிப்பும் காரமும் கலந்த பலகாரப் பொட்டலத்தை அவள் முன்னே பிரித்து வைத்தான். இவ்வளவு அன்புவைத்திருக்கும் புருஷனை பிரிந்து வாழ முடியுமா என்று நினைத்தபோது அவள் கண்கள் கலங்கின. வாயு வயிறுமாக இருக்கிற இவளைத் தவிக்க விட்டு தான் மட்டும் ஊருக்கு போவதா....? இப்படி ஒருநிலைமை வருமென நிச்சயமாகத் தெரிந்திருந்தால் இவளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளாமலேயே இருந்திருக்கலாம். ராமு வின் இதயம் அழுதது. தனக் கேற்பட்ட இக்கட்டை எண்ணி அவன் உள்ளம் கொதித்தது. கொதிப்பின் வேகத்தால் துடித்து ஆடிய கேத்தல் மூடியின் ஒசை இருவரின் சிந்தனையையும் கலைத்தது.

* * *

ஒரே தோட்டத்தில் பிறந்து வளர்ந்த உள்ளங்கள்இரண்டும் ஒன்றுப்பட்டன. பெற்றோரின் பூரண சம்மதமிருந்தும் இருவரும் மணமுடிக்க முடியாத சூழ்நிலை உருவாகி இருந்தது.

"நாங்க எலங்க பிரஜையா பதியப் பட்டுட்டோ.நீங்க ஊருக்குப் போறவங்க. எப்படிங்க நம்ம ஆசநெறவேறப் போவது...?"

ஏக்கத்துடன் கேட்பாள் சீதா.

"நாங்க ஊருக்குப்போவ இன்னு காலமிருக்குதில்ல. அதுக்குள்ள எப்பாடு பட்டாவது ஒனக்கும் சேத்து பாஸ்போட் எடுத்திட மாட்டேனா! நாம கலியாணம் செஞ்சிக்கிட்டா எம்பொஞ்சாதிங்கிறதால ஒன்ன எங்கூட அனுப்பி வைக்கத்தானேவேணும்."

நம்பிக்கையுடன் வாதிட்டான் ராமு.

மகளைப்பிரிய வேண்டி வருமே என்ற துயரம் ஒருபுறம்...., அவர்களிருவருக்கிடையிலும் பிரிவு ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஒருபுறம்....ஆனால் ராமுவும் சீதாவும் ஒருத்தருக்காக ஒருத்தர் உயிரை விடக்கூடத் தயாராக இருந்த

நிலையில் அவர்களுக்கு முறையாக மணம் முடித்து வைப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை சீதாவைப் பெற்றவர்களுக்கு. சட்டப்படி திருமணம் செய்து கொண்டு விட்டால், தன்னுடன் தாய்நாடு செல்ல அனுமதி கிடைத்து விடும் என்ற தீராத நம்பிக்கையில் பிடிவாதமாக சீதாவைக் கரம்பிடித்து விட்டான் ராமு.

காதலித்தவளைக் கைப்பிடித்த நாள் முதல் அவளைத் தன்னுடன் ஊருக்கு அழைத்து சென்று விட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே காலத்தைச் செலவிட்டான். "தெரிந்திருந்தும் ஏனப்பா மணமுடித்தாய்?" என்ற கேள்விக்குறியைத் தவிர ஒன்றி விட்ட புருஷன் பெண்ஜாதியைப் பிரிப்பதா என்ற கருணைக் கண்களை அதிகாரிகளின் முகத்தில் கண்டானில்லை. மனைவி கர்ப்பிணியாக இருக்கிறாள் என்பதை ஏதோ குற்றம் புரிந்துவிட்ட பாவனையில் தயங்கிச் சொல்லி அலுத்து விட்டது.

"வாசகால எல்லை முடிந்தும் நாட்டை விட்டுப் போகாதிருந்தால் தகுந்த நடவடிக்கை எடுப்போம். பெஞ்சாதிக்கு ஏதாவது ஏற்பாட்டைச் செய்துவிட்டு நீர் போய்தான் ஆக வேண்டும்"

சட்டம் தான் பேசியது. இறுதி கட்டமாக அரசியல் செல்வாக்கு உள்ளவர்க்கு காசைக்காட்டி காரியம் முடிக்கவும் தலைப்பட்டான்.

" காசப்பத்தி யோசிக்காதீங்க மச்சான்..... எங்கப்பாக்கிட்டச் சொல்லி எப்படியும் சமாளிக்கலாம். என்ன அநாதையா வுட்டுட்டு மட்டு போயிடாதீங்க."

சீதா தேம்பினாள்.

இந்திய பாஸ்போட்டை என்றோ பெற்று விட்ட ராமு இலங்கைப் பிரஜையாகப் பதியப்பட்டுவிட்ட தன் மனைவிக்கு இந்திய பாஸ்போட்டைப் பெற பெரும் பிரயத்தனம் பட வேண்டியிருந்தது. இதைப் பெறுவதற்குள் ராமுவின் வாசகால எல்லை முடிவடையும் நிலை. இத்தகைய பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டு,அவலத்தில் தள்ளப்பட்ட நிலையிலும் குறித்த கால எல்லைக்குள் தாயகம் திரும்பா விட்டால் தான் கைது செய்யப்படப் போவதைக் கூட பெரிதுப்படுத்தாமல் தனது வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளவென அலைந்து திரிந்த ராமுவையும், இன்னும்சில தொழிலாளரையும் ஒருநாள் தோட்டத்துள் திடீர் விஜயம் மேற்கொண்ட பொலிசார் கைது செய்து கொண்டு போயினர். அவனது குடும்பப் பிரச்சினை சட்டத்தால் நிராகரிக்கப்பட்டது. நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமென்ற கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டான்.

சீதையிடம் விடை பெற வந்த போது..........

"கடசியா நா பயப்பட்டது சரியாப் போச்சுங்களே. ஐயோ! நா எப்படிங்க ஒங்கள விட்டுட்டு உயிரோட இருக்கப் போறே. என்ன இந்த கதியில விட்டுட்டு போறிங்களே......."

ராமுவின் கால்கலைக் கட்டிக் கொண்டு கதறினாள் சீதா. எப்படித் தேற்றுவான். என்னவென்று சொல்வான்.

"சீதே இதப் பாரும்மா கடலில தள்ளாத குறையா என்ன கொண்டு போறாங்க. நீயு இப்படி பேசினா நானே கடலிலே...."

வார்த்தையை முடிக்குமுன் அவனைத் தடுத்தாள் சீதா.

"ஐயோ! வேணாங்க அப்படியெல்லா பேசாதீங்க. நீங்க ஒரு கொரயுமில்லாம போயிட்டுவாங்க. நா எப்படியு கொஞ்சநாளல ஒங்களோட வந்து சேர்ந்திரேனுங்க".

சீதா வேதனையோடு புலம்ப தோட்டமே அழுதது. தொழிலாளர் தலைவனான வேலு கண்களைத் துடைத்துக் கொண்டு,

"அதப்பாரும்மா சீதே இன்னு இரண்டொரு மாசத்தில உனக்கு பாஸ்போட் கிடைச்சிரும். நானு என்னாலான மட்டும் உதவி செய்யமாட்டேனா. ராமு ஒன்ன பெத்தவங்க கையிலதானே பத்திரமா ஒப்படைச்சி போறான். கொழந்தையு கையுமா நீயு ஊருக்கு போவத்தா போற. இப்ப தெகிரியமா வழியனுப்புமா...."

என்று ஆறுதலாகச் சொன்னான். ஒன்று பட்ட உள்ளங்கள் சட்டத்தால் பிரிக்கப்பட்டன.

பிறந்து வளர்ந்த பூமி செழிக்க அரும்பாடுபட்ட அந்த தொழிலாளி வேற்று நாட்டவனாக வெறுமையாக போகிறான். உரிமையற்ற நாட்டை உயர்வடையச் செய்த உழைப்பாளி ஊமையாகிப் போகிறான். செய்தொழில் மறப்பது மனிதப்பண்பாடாகியதோ என செயலிழந்துப் போகிறான்.

* * *

"சீதே அழுவாதம்மா. நெரஞ்ச மாசமா இருக்கிறவ இப்பிடி அழுவப் படாதும்மா. இன்னு கொஞ்ச நாளில எங்களயெல்லா வுட்டுட்டு நீ ஊருக்கு போயிட போறியேனு நாங்கத்தா அழுவனு..."

சீதாவின் தாய் மகளைத் தேற்றிக்கொண்டிருந்தாள். கணவனின் பிரிவுத்துயரால் உயிர்துடிக்க, உடல் நலிவுற தாயாகும் நாளை நெருங்கிக் கொண்டிருந்தாள் சீதா. அந்த நாளும் வந்தது. தோட்டத்துப் பிரசவ வாட்டில் பிரசவ வேதனையால் துடித்து கொண்டிருந்த போதும் அவள் வாய் "மச்சான்.......மச்சான்...... என்றே முணு முணுத்தவாறு இருந்தது. உடலும், மனசும் நொந்து போன நிலையில் அவள் படும் அவஸ்தையைக் காண தாயின் மனதை என்னவோ செய்தது.

"முதல் பிரசவந்தானே.கொஞ்சம் கஷ்டமாதாம்மா இருக்கும் பயப் படாதீங்க."

தாயாகப் போகிறவளின் தாயைத் தேற்றினாள் மருத்துவச்சி.

"குவா.......! குவா........!

என்ற பிஞ்சு குரல் அனைவரின் வயிற்றிலும் பாலை வார்த்தது. அந்தக் குரலுக்குரிய புத்தம்புது உயிருக்குப் பாலூட்ட வேண்டியவளின் உயிர் அவளுடலினின்றும் விலகி போய்க் கொண்டிருந்தது.

மகளை மகிழ்விக்கப்போவதாக எண்ணி, போராடி பெற்ற பாஸ்போட் சகிதம் உள்ளே வந்துக் கொண்டிருந்தார். சீதாவின் தந்தை.

* * *

'தேவி...!தேவி..! என்னம்மா இது. எத்தனைத் தரம் கூப்பிட்டேன். அப்படியே தூங்கிப்போயிட்டியா. நீ தேவிங்கறதேயே மறந்துட்டியா என்ன.?

அம்மாவின் கேள்வி அன்னை மீண்டும் தேவியாக்கியது.

"ஓ.. என்னருமை சீதா"

மற்றவர்களைக் காரசாரமாகத் தாக்குவதன் மூலமே அனேகமானவர்கள் புகழ் சம்பாதித்துக் கொள்கின்றனர். ஆனால் மற்றவர்கள் தூற்றியபோதிலும், அவர்களைத் திருப்பித் தூற்றாத மனப்பான்மையினால், பெரும் புகழ் சம்பாதித்துக் கொண்ட ஒரு சிலருள் திரு.கே.இராஜலிங்கமும் ஒருவர்.

சி.தில்லைநாதன்

# மக்களுக்குப் பணி செய்த மலைநாட்டுத் தலைவர்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னணித் தலைவரான திரு. இராஜலிங்கம் திடீரென்று மாரடைப்பினால் காலஞ்சென்று விட்ட செய்தியானது பல்லாயிரக் கணக்கானோருக்கு அதிர்ச்சியும் கலக்கமும் தருவதாகும். "நாம் பிறக்கும் போது பிறர் சிரிக்கிறார்கள். இறக்கும்போது அவர்கள் அழவேண்டும்" என்றார் ஓர் அறிஞர். அதற்குப் பிறர் நலன் கருதி ஏதாவது செய்தால்தான் வழியுண்டு. திரு. இராஜலிங்கம் தன் வாழ்நாள் முழுவதையுமே பொதுப்பணிக்காக அர்ப்பணித்தவர். அவர் மறைந்த செய்திகேட்டு இன்று அழுவது மலைநாடு மட்டுமல்ல.

### கல்வித் தொண்டு

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் கல்விகற்ற திரு.இராஜலிங்கம், சிறிது காலம் ஆசிரியராக கடமையாற்றினார். அக்காலத்திலேயே மலைநாட்டுத் தொழிலாளரின் வாழ்வில் அவர் அக்கறை காட்டினார். அவர்களுடைய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார நிலைமைகளைச் சீராக்க அவர் பெரிதும் உழைத்தார்.

பலமுறைகளைக் கையாண்டு மக்களின் ஆதரவை அரசியல் தலைவர்கள் திரட்டுவதுண்டு. ஆனால் திரு. இராஜலிங்கம் அந்த நோக்கம் சிறிதுமின்றி, அல்லற்பட்ட மக்கள் வாழ்வினை உயர்த்த வேண்டுமென்ற இதய சுத்தியான நோக்குடன் உழைத்தார். புசல்லாவையில் சரஸ்வதி வித்தியாலயத்தைத் தாபித்தார்.

### பத்தாண்டுகளுக்கு முன்

ஆசாபாசங்களினால் அலைக்கப்படாது, காந்தீய மார்க்கத்தை பின்பற்றிய கதராடை மனிதராக வாழ்ந்தவர் திரு. இராஜலிங்கம். "1937ம் ஆண்டில் பேராதனை இந்திய வாலிபர் சங்கத்தில் பேசிய அதே எளிமைக் கோலத்தில், கடந்த வாரமும் அவரைக் கண்டேன்" என்று ஒரு நண்பர் என்னிடம் கூறினார்.

### மலைநாட்டு இயக்கங்கள்

திரு. எஸ்.என்.சின்னையாவின் தலைமையில் இயங்கிய பேராதனை இந்திய வாலிபர் சங்கம், திரு.இராமச் செல்லையாவின் தலைமையில் இயங்கிய கண்டி போஸ் சங்கம், திரு. ஞானபண்டிதனின் தலைமையில் இயங்கிய பதுளை இந்திய வாலிபர் சங்கம் போன்ற பல சங்கங்கள் 1939ம் ஆண்டுக்கு முன்னர் மலைநாட்டு மக்கள் மத்தியிலே தொண்டாற்றின.

நேரு இலங்கைக்கு வந்த காலத்தில், கண்டி போகம்பரை மைதானத்தில் நிகழ்ந்த மாபெரும் கூட்டத்தில், நேருவினுடைய சொற்பொழிவை அழகுறத் திரு. இராஜலிங்கம் தமிழ்ப் படுத்தியது இன்னமும் தனது நினைவில் நிற்கிறதென்று ஒரு நண்பர் கூறினார். திரு.இராஜலிங்கம், மலைநாட்டின் தலைசிறந்த தமிழ்ப்பேச்சாளருள் ஒருவராகத் திகழ்ந்தவர்.

தனக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தின் போது, சிதறுண்டு கிடந்த மலைநாட்டு மக்களின் இயக்கங்கள் ஒன்றுப்படுத்தப்பட்டால், பெரும் பயன் விளையுமே என்று நேரு கூறினாராம். அதன் விளைவாகத் தோன்றிய இலங்கை இந்திய காங்கிரசை அமைக்கத் திரு. இராஜலிங்கம் முன்னின்றுழைத்தார். அதன் செயலாளராகவும் கடமையாற்றினார்.



### பாராளுமன்றப் பிரதிநிதி

1947ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது திரு இராஜலிங்கம் நாவலப்பிட்டியின் பிரதிநிதியாக பெருந்தொகையான வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்டார். அத்தேர்தலில் அவர் திரு. ஆர். ஈ.ஜய திலகாவையும், பேராதனை இந்திய வாலிபர் சங்கத் தலைவராக இருந்த திரு. பொன்னையாவையும் தோற்கடித்தார்.

நான்கு தடவைகள் இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. இராஜலிங்கம் 1956ம் ஆண்டு ஜூலை மாதம் பாரிச வாய்வு நோய் காரணமாகத் தன் பதவியை இராஜினாமாச் செய்தார். அதன் பின்னரும் அவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் தொண்டாற்றினார்.

பதவிவகித்த காலத்திலும் சரி, பதவியற்ற காலத்திலும் சரி அவர் ஒரே வகையாகத்தான் உழைத்தார். தன்னலமற்ற அந்தத்தியாகி காந்திய வழியில் நம்பிக்கை மிகுந்தவர்; பிடிவாத குணமும் முரட்டுச் சுபாவமும் அற்றவர் சாந்த குணமும் அன்புமணமும் வாய்க்கப் பெற்றவர், பாட்டாளி வர்க்கத்தின் சரியான பிரதிநிதியான திரு.இராஜலிங்கம் தாழ்வுற்று வறுமைமிஞ்சி சுதந்திரம் தவறி கெட்டிருந்த ஒரு மக்கட்கூட்டத்தின் ஈடேற்றத்திற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். சகோதர மக்களின் ஈடேற்றத்திற்காகச் சொந்த நலனை முழுவதும் தியாகம் செய்த ஒரு தலைவருக்கு உதாரணமாக என்றும் அவர் வாழ்வார் என்றால் அது உயர்வு நவிற்சியாகாது.

### ஒற்றுமை பாலம்

பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை தமிழருக்கும் இந்திய வம்சா வழியினருக்கும் இடையில் ஒருவகை மனஸ்தாபம் ஏற்பட்டதை அனேகர் மறந்திருக்கமாட்டார்கள். அந்த வேளையில் அவர்களுக்கிடையில் வெறுப்பு வளராதிருக்கும் வண்ணம் ஒற்றுமைப் பாலத்தினைக் கட்டிக் காத்தவர்களுள் முதன்மையானவர் திரு. இராஜலிங்கம் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அரசியல் வாதிகள் தமக்கு எதிராகவுள்ள இயக்க தலைவர்களை தூற்றுவதுமுண்டு. ஆனால் திரு.இராஜலிங்கம் எதிரிகளால் தூற்றப்பட்டதுமில்லை; எதிரிகளைத் தூற்றியதுமில்லை.

சமீபத்தில் கொண்டுவரப்பட்ட பிரஜைப் பதிவு மசோதாவில், மலைநாட்டு மக்களை வலுவாகப் பாதிக்கக் கூடியவாயுள்ள சில சரத்துக்களை பற்றிச் சிங்கள தலைவர்களுக்கு எடுத்துக் கூறி, அவற்றை அகற்ற அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமென்று, மிகச் சமீபத்தில் திரு.இராஜலிங்கம் ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தாராம்.

உருவம், உள்ளடக்கம் ஆகியவை பற்றிப் பலவாறாகப் பேசப்படும் போது நான் திரு.இராஜலிங்கத்தைப் பற்றி நினைப்பதுண்டு. ஒல்லியான இருள் நிற மனிதரவர். ஆனால் அவர் இதயம் பரந்தது; இருளற்றது. வசீகரமான பார்வையையும் பேச்சினையுமுடைய அவர் மனம்விட்டுப் பழகும் பான்மையுடையவர். அனேகமான அரசியல்வாதிகள் அப்படித்தான் ஆனால் அவர்கள் அவ்வாறு பழகுவது ஆதரவு பெறும் நோக்கத்துடன். ஆனால் திரு.இராஜலிங்கத்திற்கு அவ்வகையான எண்ணம் எதுவும் இருந்ததாக நினைப்பது நியாயமல்ல.

### உண்மை ஒளி

மலைநாட்டுப் பகுதியில் வாழும் மக்களுடைய பிரச்சினைகளைப்பற்றி அறிந்திருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கைப் போராட்ட நிகழ்ச்சிகளை அவை நடைபெறும் பகைப் புலத்திலேயே பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவல். ஆனால் அந்நினைவு கைகூடவில்லை. திரு.இராஜலிங்கத்தைச் சந்திக்கும்போதெல்லாம் அவருடன் நான் மலைநாட்டு மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளைப் பற்றிப் பேசுவதுண்டு.

அந்த மக்கள் எப்படி உழைக்கிறார்கள், எப்படி உண்கிறார்கள், எப்படி உறங்குகிறார்கள்., எப்படி அறிவுப் பெறுகிறார்கள், அவர்கள் தேவைகள் என்ன, என்பவற்றைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் உணர்ச்சிவசப்பட்டு, ஆனால் அடக்கமாகப் பேசியதை மறந்து விடமுடியாது

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்று பாடினார் மகாகவி பாரதி. உண்மையான உணர்ச்சியனுபவத்தின் உந்துதலினால் ஒரு கவிஞன் பாடும் கவிதையின் மூலம், அவன் அனுபவித்ததைப் பெருமளவுக்கு உணர முடியுமல்லவா? திரு. இராஜலிங்கத்தின் உரையாடல்கள் மூலம் மலைநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை நான் ஓரளவுக்கு கண்டதுண்டு.

திரு. இராஜலிங்கத்தின் பூதவுடல் மறைந்து போனதற்காக இன்று பல்லாயிரக்காணக்கானோர் கலங்குகின்றனர். ஆனால் சகோதர மக்களிடம் உண்மையான அன்பு செலுத்திய அந்தத் தியாக ஒளி மறைந்துவிடவில்லையே.

99999999

## மலைகளின் ஓலம்

அக்குரணை ஏ. ஜரீர்

வெற்றுச் சாக்கு......!
வெற்று உடம்பு......!
வெறும் வயிறு.......!
முடங்கிய தான
சத்தியங்கள்!
இன்னும்
சாட்டுகள் பூசப்பட்ட
வாக்குறுதிகளின்
இரும்பு இறுக்கங்களில்.......
ஒருமுறை,
இன்னும் ஒரு முறை,
இப்படியே
நெருங்கிப் பழகிப்
போனவர்கள்.

விடுதலை—
உச்சரிக்க முடியாத
கடினம்.
உஷ்ணம் மாறி
குளிர் காலமும்
இலையுதிரும்,
நாங்கள்.....?.....!
அண்ணாந்த பார்வை
தாழ்த்தப்படுவதற்காயும்
எம் முணர்வுகளை
ஒடுக்குதற்காயும்
அடிக்கடி.......
வேள்விகளும்
மலரா அர்ச்சனைகளும்.
மலைகள்
வற்றுவதற்றதான
அருவிகள்.
எமக்கான ஓலமென்பதாய்
உறுதி கொள்ளலாம்.

# ஜீவன் உயிர்த்தெழடா!

"குறிஞ்சி தென்னவன்"

~~~~~~~~~~~~~~~~~

சொந்த நிலமென ஓரடி மண்ணும்
சொந்தமி லாதவ னே! - முன்
வந்தவர் மறைந்திட வழிவழி வந்தவர்
வாழ்வும் இருள்மூ டி-
இந்த மலையகம் சுந்தரம் உற்றிட
எத்தனை இன்னலுற் றாய்? - நீ
சிந்தனை செய்,வெறும் சோற்றுப் பொதியல;
ஜீவன் உயிர்த்தெழ டா!

'கங்குல் விலகிடும், எங்களின் வாழ்க்கையில்
கதிரொளி பரவிடுமே'; என
பொங்கிடும் ஆவலில் எத்தனை ஆண்டுகள்
போக்கினாய் வீணாக - உணர்வு
மங்கிய வாழ்வினில் சுதந்திரத் தின்ஒளி
மருவிடப் போவதில்லை, - உல
கெங்கும் சுதந்திரக் கனல் வளர்ந்திடும்
எழுச்சியைப் பாராயோ!

எட்டடி அறையினுள் உலகினைக் கண்டு
இறுமாந் திருந்தவனே! - உனை
ஒட்டி யுறவென கட்டி அழுதவர்
உறவுக்குத் தோள்கொடுத்தாய்! - அவர்
எட்டி யுதைத்துனை ஏளனம் செய்யினும்
இன்பமென நினைத்தாய், - வெறும்
குட்டிச் சுவரினில் நித்திரை கொள்வதை
கோடி சுகமென் றாய்!

போலிகள் தம்மையே வேலிகளென்றும் நீ
பூரிப்பில் ஆழ்ந்திருந் தாய்! - அந்த
காலிகள் பயிரையே மேய்ந்து வளம்பெற
கண்டும் மரமானாய், - 'ஏ
மாளிகள்' என்றுனை எத்திப் பிழைத்தவர்
எத்தனை பேர்களடா! - இவர்
சோலிமு டித்திட நீயொரு கருவியா?
சிந்தையில் எண்ணிடடா!

கட்சி வலையினில் சிக்கவைத் தேயுனை
சுந்தர கோலஞ்செய்தே, - தினம்
பட்சித் திடும்முத லாளித் துவகொடும்
பாதகர் தோழமை யா?
எச்சிற் பிழைப்பா? சுதந்திர வாழ்வா?
எதுவென தேர்ந்திட டா!
அச்சம் தவிர்த்தெழு, ஆண்மை யுடையவன்
ஆம், எனில் மனிதன டா!

தேயிலை செழித்திடும் போலெவர் வாழ்வோ
செழித்திடும் உன் வாழ் வோ? - அட,
நாயினும் கேவலம், நன்குனர் வாயெனில்
நாளை உயர்த்திட லாம்! - கொடுந்
தீயினைப் போலுன் வாழ்வை எரித்தவர்
தோழமை யா தோ ழா! - தொற்று
நோயிவர், உண்மை நேயரைத் தேடு,
நிச்சயம் வாழ்வு யரும்!

"கண்களைப் போலவே உங்களைக் காப்பதெம்
கடமை", எனச்சொல்லி - என்றும்
எங்களின் உழைப்பினை விற்று எவரெவர்
ஏற்றி மிகவடைந் தார்! - சீழ்
புண்களைப் போன்றவர், கொள்கையில் சோரம்
புரிந்திடும் கயவர்களாம்! - இவ்
வஞ்சக் கொடியரை, நஞ்சென வெறுத்திடு,
வாழ்வு மலர்ச்சி யுறும்!

மேடையில் நாடகப் பாணியில் ஆடிடும்
மேட்டிமைக் காரர்களின்
கூடை நிறைந்திடும் குப்பை யுரைகளை
கேட்டுச் செவிகுளிர்ந்தும், - உன்
பீடை தொலைந்தில, பேடிக ளாமிவர்
பேச்சும் முடியவில்லை; குளிர்
வாடையி லேயுடல் ஆடி நடுங்கிடும்
மலைமக னே உணர்வாய்!

காந்தியின் பெயரை கணக்கிலா இடங்கள்
காண்பவர் தமக்கெலாம் உரைப்பார் - மது
மாந்தியே "இன்னில் மங்கைய ரோடு
மருவிச் சுகத்தில் திளைப்பார்!
வேந்துப் பணியெலாம் தம்தலை நீட்டி
மேல்வரு வாயை குவிப்பார்! - இதை
ஓர்ந்து உணர்ந்து ஓ.... மனி தனாய் நீ
உயர்வது என்றோ?..... உரைப்பாய்!

சங்கத் திருடரை பிறன்மனை கவரும்
தருக்கரை தலைவர்க ளாக்கி;
அங்கம் புளகாங் கிதமடைந் தேபெரும்
ஆனந்த வாரிதி திளைத்தாய்!
பங்க மடைந்திடும் வாழ்வினைத் திரும்பி
பார்க்க மறந்தவ னேநீ
பொங்கி, எழு; விழிப் பெருந்தீக் கனலினில்
பொய்யர்கள் வாழ்வு நீ றாக!

தலைநகர் தனில் குளிர் சாதன அறையில்
தளிருடலார் அரு கிருக்க
பலபல சுகங்களை அவரனு பவிக்க
பாட்டா ளிகளோ தொடர்ந்தும்
தலைமுறை தோறும் இவர்களின் ஏவல்
தனைச்செய் திடும்அடி மையாய்
உழைப்பதே விதியா ஓ... மலை மகனை,
உணர்விலா கற்சிலை யாநீ?

~~~~~~~~~~~~~~~~

# குன்றத்து குமுறல் - கவிதைத் தொகுதி

## ஒரு நோக்கு

ஈழத்து பிரதேச இலக்கியத்தில் ஒன்றாகிய மலையக இலக்கியம் சோகம் ததும்பும் ஏகாந்தங்களையே பெரும்பாலும் தரிசித்து வந்த போதும் அண்மைக் காலத்திலிருந்து புதிய நம்பிக்கையையும் செயலூக்கத்தையும் ஏந்தி வரும் மக்கள் இலக்கியத்தையும் அது தரிசிக்க தவறவில்லை. மேற்குறிப்பிட்ட அணியில் சேரும் திறனும் வலுவும் வாய்ந்த தேசிய கலை இலக்கிய பேரவையின் வெளியீடான ''குன்றத்து குமுறல்'' இந்த கவிதை தொகுப்பு பற்றிய அறிமுகத்தினை வழங்க வேண்டியது சமகால எழுத்தாளர்களின் கடமையாகும்.

அடிமைகள் என்ற நித்தியமான எண்ணத்துடனும் மனிதாபிமானமற்ற முறையில் பலவிதமான வன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமை குமுறலாக, குரலாக விளங்கும் இந்த தொகுப்பின் தலைப்பு ''குன்றத்து குமுறல்'' என்பது பொருத்தப்பாடுடையது. இந்நிலமையில் நேரடியாக அடிமை சமுதாயத்தில் வாழ்ந்து அதன் கொடுமைகளை உள்ளும் புறமும் கண்ட தோழர்களான தம்பையா, இராஜேந்திரன், பன்னீர் ஆகியோருடன் இச்சமுகத்தை சாராதவரான போதும் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிய காலத்தில் மலையக மக்களின் வாழ்வியலை நன்கு அறிந்தவர் என்ற வகையிலும் சி. சிவ சேகரம் போன்றோர் கவிதைகளை ஆக்கியிருப்பது இத்தொகுப்புக்கு வலிமை சேர்ப்பதாக அமைகின்றது.

இத்தொகுப்பில் சிவசேகரத்தின் இரு கவிதைகளும், இ.தம்பையாவின் பத்து கவிதைகளும் சிவ. இராஜேந்திரனின் பதினாறு கவிதைகளும், பன்னீர் செல்வத்தின் பதினான்கு கவிதைகளும் குன்றத்தின் குமுறலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. தவிரவும் இது 115 பக்கங்களை கொண்ட நூலாக துலங்குகின்றது.

மலையக இலக்கியங்கள் இம்மக்களின் வாழ்வை எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்துகின்றது என்பதை ஆராய்வதற்கு முன்னர் மலையகம் என்ற சொல்பற்றிய தெளிவான வரையறையை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். இது விடயத்தில் கலாநிதி துரை மனோகரன் குறிப்பிடுவது போல *"மலையகம் என்பது இன்று வெறும் புவியியல் அர்த்தத்தை மாத்திரம் சுற்பிப்பதன்றி தன்னளவில் தனித்துவமானமக்கள் வாழ்நிலைகளையும், அதற்கு ஆதாரமான பெருந்தோட்ட பயிர்ச் செய்கையையும், அதன் பக்க விளைவுகளான சிறு முதலாளித்து வத்தையும், சுரண்டலையும் புலப்படுத்தி நிற்கின்றது."* எனவே மலையக இலக்கியமும் தவிர்க்கவியலாதவாறு மேற்குறிப்பிட்ட கருத்தினை பிரதி பலிப்பது கண்கூடு. குன்றத்து குமுறலும் இதற்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல. இந்தவகையில் மலையகத்தின் அனைத்து பிரச்சனைகளையும் சுட்டிக் காட்டுகின்றது என்பதை விட இம்மாந்தரின் அடிப் படைப் பிரச்சனைகளை சுட்டிக் காட்டுகின்றது.

*அதனால் தினம்*
*பிரிவுகளே கருவாக*
*பிறக்கின்ற உலகத்தில்*
*சிலரின் சீறிய மூச்சுகள்*
*சிதறப் பிளக்கின்றது வானை*
*(இ.தம்பையா பக்-29)*

மேற்குறிப்பிட்ட கவிஞர் தம்பையாவின் வரிகள் மாந்தரின் கொடுமைகளையும், போராட்ட பாரம்பரியத்தையும் வார்த்தை ஜாலங்களாக்கி மேடை முழக்கமிட்டு பிழைப்புவாதம் நடாத்துகின்ற இழிசனர்களின் பொய்யுரைகளையும், இம்மக்களின் துயரகரமான வாழ்க்கையையும் சித்தரிக்கின்றது. இது வெறும் அழகிய வெளிப்பாடல்ல. இங்கு உணர்வுகள் பதிவு செய்யப்படுகின்றது.

*"கும்மியடி தோழி கும்மியடி மலை*
*நாடு விழித்தெழக் கும்மியடி*
*நம்மையுறுஞ்சிக் கொழித்திடும்*
*அட்டைகள்*
*காலில் நசித்திடக் கும்மியடி"*
*(சி.சிவசேகரம் பக்-23)*

மேற்குறிப்பிட்ட கவிதாவரிகளில் நாம் மலையக நாட்டார் பாடல்கள் ஒன்று ஒப்பிட்டு நோக்குவதுடன், சமூக வளர்ச்சிக் கட்டத்தினை நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

*"அட்டை கடிக்குதடி*
*அழகு ரத்தம் சிந்துதடி*
*செல்லும் கடிக்குதடி*
*சீரழிந்த கண்டியிலே*

என்ற மலையக நாட்டார் பாடல் கோரமான அச்சமூக அமைப்பில் மக்களுடைய துன்பங்களையும், இயலாமையையும், வெளிக்காட்டு வனவாக அமைந்துள்ளது. இவ்விடயத்தில் கவிஞர் சிவசேகரத்தின் வரிகள் சமூக வளர்ச்சியினூடாக இம்மாந்தர் தம்முடைய இயலாமைகளை உடைத்தெறிந்துக் கொண்டு உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகின்றார்.

குன்றத்துகும்மி, சிவ.இராஜேந்திரனின் இருவர் பாடல், காலம் நெருங்குது கண்ணாத்தா, விடியலை நோக்கிய வேலைக்காடு ஆகிய கவிதைகள் நாட்டார் பாடல் மெட்டினை அடி நாதமாக கொண்டு விளங்குவது, மக்கள் இலக்கியமாக மக்களை சென்றடை வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்தவகையில் யுக கவிஞன் பாரதியின் பாடல்களும் மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களும் இன்றளவும் சிலாகித்து பேசப்படுவதற்கான அடிப்படைக் காரணம் அவை கருத்தாழத்துடன் நாட்டார் பாடல்கள் மெட்டில் அமைந்தவையே என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

**லெனின் மதிவாணம்**

பேராசிரியர் நுஃமான் குறிப்பிடுவது போல "கவிதை என்பது அறிவுப் பூர்வமாக அல்லாமல் அநுபவ பூர்வமானதாக உணர்வு பூர்வமானதாக இருக்க வேண்டும்" அந்த வகையில் இக்கவிஞர்கள் அனைவரது கவிதைகளின் கருத்துக்களும் ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய நேரடியான வாழ்க்கை அனுபவங்களோடு ஒப்பிட்டு நோக்கியறியக் கூடியதாக உள்ளது. எடுத்துக் காட்டாக "அருமை அம்மா" என்ற கவிதையில்

*அம்மா*
*அந்த பெண்கள்*
*காரில் பயணிக்கும்*
*போது உன் கால்களுக்கு*
*செருப்பு கூட*
*இல்லையே*

என்ற பன்னீரின் வரிகள் உணர்வு பூர்வமாக அமைவதுடன் நின்று விடுகின்றது. கவிஞன் சமூகப் பிரச்சனைகளை மட்டும் கோடிட்டு காட்டுவதுடன் நின்று விடாமல் சமுகமாற்றத்திற்கான வழிவகைகளை பிரஸ்தாபிப்பது வரவேற்க தக்கதாகும். "அருமை அம்மா" என்ற இக்கவிதையிலும் இத்தகைய நிலைப்பாட்டினை கொண்டிராமை தவிர்த்து கொள்ள வேண்டிய தற்காலிக தவறாகும்.

*டெவனில்*
*தேயிலைகளை மறைத்து நின்ற*
*மக்கள் கூட்டம்*
*அட்டன் வீதிகளில்*
*ஹைலன்ஸ் மாணவர்களால்*
*சிந்தப்பட்ட புதிய ரத்தம்*
*மலையகமெங்கும் உயர்த்தப்பட்ட*
*மனித முஷ்டிகள்*
*மாபெரும்*
*விருட்சமாய் மலைகளாய்*
*மலையக மக்கள்*
*முன்னோக்கி போய்*
*கொண்டிருக்கின்றார்கள்*

என்ற கவிஞன் சிவ. ராஜேந்திரனின் வரிகள் மலையக தியாகிகளை பற்றியும் தெளிவுப்படுத்துவதை காணலாம். சிவனுலட்சுமணனுக்கு முன்பு வீழ்ந்த தியாகிகளின் பிணங்கள் (முல்லோயா கோவிந்தன், டெவன் வைத்திலிங்கன் வெள்ளையன், லட்சுமணன் என பட்டியலை நீட்டலாம்) பேரினவாத சக்திகளுக்கு எருவாக இருந்தது, ஆனால் சிவனுலட்சுமணனின் பிணம் இம்மக்களின் மேல் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளை வீழ்த்தும் சக்தியாக பல மக்களை தூண்டும் ஒன்றாக அமைந்ததை இக்கவிதை தெளிவுப்படுத்துகின்றது.

சிவனு லட்சுமணன் போராட்டத்தில் நேரடியாக பங்கெடுத்து போராடியவர்கள் என்ற வகையில் (அப்போது ஹைலன்ஸ் கல்லூரி மாணவர்களான இ.தம்பையா சிவ. இராஜேந்திரன்) அவர்களுடைய கவிதை வரிகளிலும் போராட்ட கனல் தெறிப்பதை காணலாம். இந்த வகையில் இ.தம்பையா, சிவ. இராஜேந்திரன் ஆகியோரின் பல கவிதைககளில் மேற்குறிப்பிட்ட கருத்து பிரதி பலிப்பதை காணலாம். தவிரவும் "ஜேம்ஸ் டெயிலருக்கு" என்ற கவிதையில் முல்லோயா கோவிந்தன் பற்றியும் காணப்படுவது அவதானத்திற்குரியது.

தொகுப்பில் உள்ள "பிடித்துண்டுக்கு ஒட்டுப்போடுவேனா?; தலைவரு கண்டிக்கின்றார், ஆண்டவனுக்கு மனு! போன்ற கவிதைகள் திட்டமிட்டே இம்மக்கள் அரசியலில் ஏமாற்றப்பட்டு வருவதையும், அதற்கு இம்மக்களின் தலைவர்கள் என தம்மை பிரகடனப் படுத்திக் கொள்பவர்கள் தொழிலாளர் நலன் பேணும் நோக்கிலிருந்து தவறி தங்கள் வாழ்க்கை நலனுக்காக இவர்களை ஏய்த்து பிழைக்கின்ற பிழைப்பு வாதத்தையும் கவிஞர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இந்தகவிதை தொகுப்பில் இழையோடி உள்ள பொதுத்தன்மை என்ற விடயத்தினை கருவூலமாக கொண்டு பார்வையினை பதிக்கும்போது ஆழ்ந்த மனிதநேயமும் பொதுவுடமை சிந்தனைகளுமே இதில் இழையோடியுள்ளன. இது பற்றி கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தேசங்கள் உலக ரீதியாக ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. பௌதீகப் பொருள் உற்பத்தியை போலவே, அறிவுப்பொருள் உற்பத்தியிலும் இதே நிலைமை. தனிப்பட்ட நாடுகளின் அறிவுப்படைப்புகள் பொது சொத்தாகின்றன. ஒரு தலைப்பட்சமான தேசிய பார்வையும், குறுகிய மனப்பான்மையும், மென்மேலும் அசாத்தியமாகின்றன. மிகப்பல தேசிய இலக்கியங்களிலிருந்தும், தல இலக்கியங்களிலிருந்தும் ஓர் உலக இலக்கியம் உதயமாகின்றது.

இன்றும் உலக இலக்கிய உற்பத்தியை கூர்ந்து நோக்கும் போது முதலாளித்துவ சார்புடைய இலக்கியங்கள் மாத்திரமன்று அதற்கு எதிரான பாட்டாளிவர்க்க சார்புடைய சோஷலிச இலக்கியங்களும் மலர்கின்றன. இந்த நிலையில் குன்றத்து குமுறல் கவிதை தொகுதி மலையகத்தில் வாழும் உழைக்கும் வர்க்கத்தினரை இந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பிரதி பலிப்பதுடன் வர்க்க முரண்பாடு, வர்க்கப்பிரச்சனை என்பனவற்றின் அடிப்படையில் அணுகுவதில் ஒரு பொதுத்தன்மையினை கொண்டுள்ளது. அதன் தனித்துவமான சிறப்பாகும்.

*உழைக்கும் வர்க்கமே*
*உயர்ந்து எழு*
*உலகை நிமிர்த்துவோம்.*

என்ற கவிஞன் பன்னீரின் குரல் உலக பாட்டாளிவர்க்க உறவுக்கும், அவர்களின் உரிமைக்கும் குரல் கொடுப்பதை காணலாம்.

இக் கவிஞர்களின் தத்துவ நோக்கும் அதன் அடிப்படையான இலட்சிய தாகத்தினையும் நோக்கும் போது சீன இலக்கிய முன்னோடியான லூசுனின் கருத்து எடுத்தாளத்தக்கது. "ஒரு எழுத்தாளனால் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு வர்க்கங்களை கடந்து நிற்க முடியாது. யுத்தக் காலத்தில் வாழ்ந்து கொண்டு யுத்த 'முனைகளிலிருந்து விடுபட்டு தனித்து நிற்க முடியாது. இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரால் எதிர்காலத்திற்காக எழுத முடியாது. அப்படி செய்ய முடியும் என்பது வெறும் போலித்தனமாகும்.நிஜ வாழ்க்கையில் அப்படி மனிதன்இருக்க முடியாது." மேற்குறிப்பட்ட லூசுனின் கருத்தை ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் ஏற்றுக்கொண்டவர்கள் போல சமுதாயப்பிரச்சனைகளை வர்க்க முரண்பாடு வர்க்கப்பிரச்சனை என்பனவற்றினை கண்டதுடன் அவற்றினை வர்க்க போராட்டத்தின் அடிப்படையில் பரிகாரம் தேட முற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட தத்துவ வீச்சுகளை கொண்டமைந்த இந்த கவிதை தொகுதியில் காணப்படுகின்ற சமுதாய அக்கறை, மனித நேயம், கொடுமையை கண்டு குமுறும் மனித உணர்வுகளை இயன்றவரை சமுதாய பகைப்புலத்தில் வைத்து நோக்கபடுகின்ற தன்மை தவிரவும் குறியீடு படிமங்கள் ஆகியவற்றினை அளவுடன் கையாண்டு கருத்தாழத்துடன் கூடிய கலைச் செழுமையுடன் காணப்படுவது வரவேற்க தக்கதாகும். இது எந்த மக்களுக்காக படைக்கப்பட்டதோ அவர்ளை சென்றடைந்து விழிப்பையும் சமூக மாற்றத்தையும் ஏற்படுத்துமாயின் அதன்நோக்கும் போக்கும் நிறை வேறியதாக கொள்ளலாமா.

# மலையக மக்களின் நாட்டார் வழக்காற்றியல்

உடுவைஎஸ்.தில்லை நடராசா

ஒவ்வொரு நாட்டினும் அபிவிருத்தியின் சின்னமெனக் கருதப்படும் உயர்ந்த கட்டிடங்கள் இயந்திர சாதனங்கள் உட்பட பல்வேறு வசதிகளுடன் அதிக குடிசனத்தொகை உள்ள இடங்கள் 'நகரம்' எனவும் அதனை அண்மித்துள்ளபகுதிகள் 'நகர்ப்புறம்' எனவும் ஏனையவை 'கிராமங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. கிராமங்களில் வாழும் மக்கள் மத்தியில் காணப்படும் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், கலைஇலக்கிய அம்சங்கள், மருத்துவ முறைகள் - "நாட்டார் வழக்காற்றியல்" என அழைக்கப்படுகிறது. இருப்பினும் கிராமிய மக்களின் இலக்கியமே - அதுவும் பாடல்களே பெரும்பாலும் 'வழக்காற்றியல்' என்று பேசப்படுகிறது.

மலையக மக்களின் நாட்டார் பாடல்கள் பொருளும் சுவையும் நிறைந்தனவாக இருப்பதோடு பிரபல மான திரைப்படப்பாடல்கள் உட்பட பல வகையான இலக்கிய வடிவங்கள் தோன்றுவதற்கும் கருவாகவும் அமைந்துள்ளது.

படிப்பறிவு குறைந்தவர்களிடையே எழுதா இலக்கியமாக ஒலித்த பாடல்கள் விழிப்புக்குள்ளானவர்கள் வழிகாட்ட வாய்மொழிப்பாடல்கள் எழுத்துருவம் பெற்று அச்சாகின. காலத்துக்குக் காலம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மறுமலர்ச்சி ஆகியவற்றை இப்பாடல்களும் பிரதிபலிக்கின்றன.

மலையக மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட படைப்பாளிகள் மாத்திரமல்லாமல் தொழில் காரணமாக மலையகத்தில் வாழ்ந்தோரும் 'நாட்டார் வழக்காற்றியல்' வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக அவ்வப்போது தேடல்களும் பதிவுகளும் இடம்பெற்றபோதும், இவ்வருடம் (1993) இந்து சமய தமிழ் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தேசிய சாகித்திய பெருவிழாவுக்கு தொனிப்பொருளாக 'நாட்டார் வழக்காற்றியலை' தெரிந்தெடுத்ததால் அரச ஆதரவு கிடைத்ததுடன் பரவலாக ஆக்க முயற்சிகளும் இடம் பெற்று வருவதை காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் மலையக கலை இலக்கியப் பேரவையும் சத்தியோதய பொது சனத்தொடர்புப் பகுதியும் இணைந்து நடாத்தும் கருத்தரங்கும் வரவேற்புக்கும் பாராட்டுக்குக்கும் உரிய ஓர் அம்சமாகும். கருத்தரங்கின் வெற்றிக்கு உழைக்கும் வளத்தருநர்களும் பார்வையாளரும் ஏற்பாட்டாளர் தமிழ்மணி அந்தனி ஜீவாவும் நன்றிக்கு உரியவர்கள்..

இடம்பெறும் 'சம்பூர்ண அரிச்சந்திரா' நாடகத்தை நடிகமணி வி.வி. வைரமுத்து குழுவினர் மயான காண்டம் என்ற பெயருடன் இரண்டு மணி நேரமாகக் குறைத்ததால் தான் கொழும்பில் பல தடவைகள் மேடையேற்றக் கூடியதாக இருந்தது. அதே போல வானொலி நடிகர்கள் சராசரி ஒருமணி நேரம் ஒலிபரப்பாகிய ஆறு நாடகங்களை மேடை நாடகங்களாக்கி யாழ்ப்பாணத்திலுள்ள கிராமமொன்றில் நடித்தார்கள்.

பட்டதாரிகளும் பல்கலைக் கழகத்திலுள்ளோரும் கணிசமான அளவு பங்களிப்புச் செய்யவேண்டும்; அவர்களுடன் நாட்டாரியலில் நாட்டம் கொண்டோர் அனைவரும் தேடலிலும் சேகரித்து வகைப்படுத்தி பதிப்பித்தலிலும், பாதுகாப்பதிலும் ஈடுபட வேண்டும். செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்களும் சேர்ந்து செயற்படும் போது சாதனைகளைச் செய்வது எளிதாக இருக்கும்.

பாடசாலை நிகழ்வுகள் உட்பட எங்கெல்லாம் சந்தர்ப்பம் பெறமுடியுமோ அங்கெல்லாம் நாட்டார் வழக்காற்றியலுக்கு போதியளவு இடம் கொடுக்கப்பட வேண்டும். இடத்தையும் பார்வையாளரையும் கருத்திலும் கவனத்திலும் கொண்டு பலவடிவங்களையும் ஊடகங்களையும் பயன்படுத்த வேண்டும்.

நாட்டார் பாடல்களும், ஒயிலாட்டம், கரகம், காவடி போன்ற நடனங்களும் காமன்கூத்து, பொன்னர் சங்கர் கதை, அருச்சுனன் தபசு போன்ற நாடகங்களும் மலையகத்துக்கு வெளியிலும் இடம் பெற ஏற்பாடு செய்தல் அவசியம். இடத்தையும் இருப்போரையும் மனதில் கொண்டு ஆற்றப்படும் கருமங்கள் வெற்றியைத் தரும். உதாரணமாக அந்த நாட்களில் யாழ்ப்பாணப்பகுதியில் இரவு முழுவதும் நாடகம் இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை மூன்று மணிக்கு முடிவடைந்ததும் கிராமத்திலிருந்தும் அயற்கிராமங்களிலிருந்தும் திரண்டு வந்தோர் விடிய ஐந்து மணி வரை நாடகம் நடக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

இரசிகர்களின் ஆர்வத்தினால் வானொலி நடிகர்களுக்கே தலைகால் புரியாத ஆனந்தம்.

"நீங்குகள் தான் உண்மையான ரசிகர்கள்" என்று வானொலி கலைஞர்கள் சொன்னதும் - அங்கிருந்தோர் - தாங்கள் தூரத்திலிருந்து வந்திருப்பதாகவும் விடிந்தால் தான் ஊருக்குத் திரும்பலாம் எனவும் அதுவரையும் மேடையில் ஏதாவது செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். நடிகர்கள் வசம் மேலதிக நாடகம் இல்லாததால் பாடத் தெரிந்தவர்கள் நிலைமையைச் சமாளித்தனர்.

நாட்டார் பாடல்களில் பாலியல் இடம் பெறுவதாகவும் சிலசொற்கள் பச்சையாக பயன்படுத்தப் பட்டுள்ளதாகவும் பலர் குறைபடுவதையும் காண முடிகிறது, விரசமில்லாத பாடலானால் அவற்றை அப்படியே கையாள்வதும் உலாவ விடுவதும் நல்லது. உதாரணத்துக்கு இளைஞன் ஒருவன் நீர்நிலையருகே செல்லும் போது நெஞ்சளவு ஆழமுள்ள

தண்ணீரில் பயந்து பயந்து நடந்து செல்லும் பெண்ணொருத்தியை வம்புக்கு அழைக்கின்றான்.

'மார்பளவான் தண்ணீரில்
இழுத்து இழுத்துப் போறபெண்ணே
மார்பிலிருக்கும் அந்த
மாதுளங்காய் என்னவிலை"

உடனே அந்த பெண்

"மாதுளம் காயுமில்லை
மல்லுக்காரம் பிஞ்சுமில்லை
பாலன் குடிக்கும்
பால்முலையடா சண்டாளா"

என்று கோபத்துடன் சாடி இளைஞனை நல்வழிப்படுத்துகின்றாள்.

இப்படி வரும் பாடல்களில் படிப்பினையை காணலாமே தவிர பாலியலை காணமுடியாது.

சில பாடல்களில் எழுத்துப்பிழைகள் சொற்பிழைகள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

எல்லோராலும் போற்றப்படும் திருக்குறளிலேயே பிழை இருப்பதாக அறிஞர் ஒருவர் கூறுகின்றார்.அவர் கூற்றுபடி-

"உடுக்கை இழந்தவன் கைபோல்
ஆங்கே இடுக்கண்களைவதாம் நட்பு"

-என்ற குறள்

"உடுக்கை இழப்பவன் கை போல்
ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு"

என திருத்தி எழுதப்பட வேண்டும். ஏனென்றால் உடுப்பை இழந்தான் ஒருவனின் மானம் போய்விடும். உடுப்பை இழப்பதன் முன்பாக இழப்பது போல தெரியவரும்போது முந்தி ஓடுகின்ற சொந்தக் கையைப் போல இடுக்கண் வரும் போல தெரிந்ததும் ஓடோடி சென்று உதவிபுரிவது நட்பு என்கிறார்

எனவே பொருத்தமான இடத்து எழுத்துப்பிழை சொற்பிழைகளும் உரியமுறையில் திருத்தப்பட வேண்டும்.

'மலையக மக்களின் நாட்டாரியல்' தொடர்பாக மேலும்பல செயலமர்வுகள் ஆக்கபூர்வமான முறையில் நடாத்தவும் நாடிய நோக்கத்தை அடையவும் நல்வாழ்த்துக்கள்.

## மலர்களே மௌனமா

இன்னும்
இன்னும்
எங்கள் வரலாறு
சோகப் பையினுள்ளேயே
முடிந்து வைத்துள்ளார்கள்!

சாமிகளும்
சாஸ்திரங்களும்
வேதனைகளை
குறைத்ததாக
வரலாற்று
ஏடுகளே
பறைசாற்றி
நிற்கிறது!

கொடுமைகளும்
கொடூரமும்
பூமித்தாயின்
பூவுடலெங்கும்
புண்ணாய்
பூக்கிறது!

மேடைகளில்
கூடை நிறைந்த
பொய்கள்
தலைவர்களின்
வாய்
அகலத்திற்கேற்ப
அளந்து
கொட்டுகிறார்கள்!

கேட்டுவிட்டு
மட்டும்
மக்கள்
மௌனமாகவே!

சுதந்திரநாடுதான்
யாருக்கென்றுதான்
யாருக்கும்
தெரியாது

கொடுமைகளுக்கு
எதிராய்- யாரும்
கொடிபிடிக்க
முடியாது - இது
அகிம்சா மூர்த்தியின்
அதிசய கோட்பாடு
மீறின்
பழைய டயர்களோடுதான் - உடல்
பற்றி எரியும்!

விடுதலை
என்று எவனும்
வீராப்பு
பேசினால்
கல்லறை
மனைவிகளையே
கட்டி வைத்து
விடுவார்கள்!

இன்றைய
காந்திகள்
குண்டர்
படைகளோடுதான்
தொண்டாற்றி
வருகிறார்கள்!

இன்று
ஆண்டவனிடம்
ஆசீர்வாதம்
கேட்பதெல்லாம்
அக்கிரமம்
செய்வதற்குத்தான்!

"நாளைய
கொலைகளை
காட்டிக்கொடுக்காதே"
என்று
போதி மரத்து
புத்தனுக்கு
புது விண்ணப்பங்கள்
எண்ணப்பங்களாய்
எழுதப்படுகின்றனவாம்!

புத்தனின்
போதனையிலேயே
போக்கிரிகளின் ஆட்சி
நீடிக்கிறது!

இஸ்ரேல் காரனுக்கு
இரும்பு இதயமென்றால்
பாலஸ்தீன காரனுக்கு
உருக்கு
இதயமல்லவா
உருவாக்கியிருக்கிறது!

மிதித்து
உதைத்து
வெட்டி
கற்பழித்து
கூடாரங்களை
கொள்ளையடித்து
பற்றவைத்த போதும்
இந்த
மலர்களெல்லாம்
மௌனமாயிருப்பதன்
அர்த்தமென்ன!

இராகலை பன்னீர்

சிறுகதை

# பொன்னியின் பூரிப்பு

செல்வி.த.கலைச்செல்வி

"தலையில் கொழுந்துக் கூடையை சுமந்துகிட்டு இந்த ஏத்தத்திலே நீ ஏறி வர்றதைப் பார்த்தா....... மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு பொன்னி!"

கணக்கப்பிள்ளையின் குரல் பொன்னியைத் தடுத்து நிறுத்தியது. கடைசி நிரையையும் முடித்து விட்டு கைகால் அலம்பி விட்டு, தேயிலைக் கொழுந்து நிறைந்த கூடை தலையை அழுத்த, மூச்சிறைக்க நடந்து வந்த பொன்னி சற்றே நின்றாள். பொன்னி கை கால் அலம்பி வருவதற்கு முன்பே மற்ற நிரைப் பெண்கள் எல்லாம் இஸ்டோருக்குப் போய்விட்டார்கள்.

"எல்லாரும் சோத்துக்குத்தான் ஒழைக்கிறோம். ஆனா நீ..... இப்படி கஷ்டப்படறீயே பொன்னி!"

"பொன்னி ஒம்புட்டு காம்பிரா விஷயம்........."

போக முயன்ற பொன்னி, ஏதோ புதையல் கிடைத்துவிட்டதைப் போல சட்டென்று நின்றாள். கணக்கப்பிள்ளையின் முகத்தை ஏறிட்டு பார்த்தாள். அவள் பார்வையில் ஆவல் தேங்கிக் கிடந்தது. திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்னும் தன் தாய் வீட்டிலேயே இருக்கிறாள். பொன்னி. இல்லறத்தில் நல்லறம் காணலாம் என்ற ஏக்கத்தில் தனிக்காம்பிரா கேட்டு அவளுக்கும் அலுத்துப் போய்விட்டது.

முருகன் அவள் புருஷன் - தனிக் காம்பிரா இல்லாத காரணத்தாலோ என்னவோ வீட்டுக்கு சரியாக வருவதில்லை. தோட்டத்திலிருந்து ஏழு எட்டு மைலுக்கு அப்பால் இருக்கும் பாறைமலை டவுனில் மூட்டை தூக்கி, எடுபிடி வேலை செய்து வருவது தான் முருகன் தொழில். தோட்டத்தில் பெயர் பதிய கேட்டாலும், குடும்பம் நடத்தக் காம்பிரா இல்லயே என்பதால், அந்த முயற்சியிலும் முருகனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எப்போதாவது இருந்திருந்து தனது மனைவியையும், இரண்டு வயது மகளையும் பார்க்க வீட்டுக்கு வந்து போவான்.

" தனது தாய் வீட்டிலுள்ள கும்பலில் தனது குடும்பத்துக்கு ஒரு தனிமை இல்லையே" என்று முருகனோடு சேர்ந்து புழுங்குவது பொன்னியின் வழக்கமாகிவிட்டது. தோட்டத்தில் உள்ள தொழிலாளருக்கு கணக்கப்பிள்ளையை விட்டால் வேறு கதியே கிடையாது. பலமுறை கணக்கப்பிள்ளையிடம் தனிக்காம்பிரா கேட்டு கெஞ்சாத குறை இல்லை.

"என்ன பொன்னி....... ஒனக்கு ஒருகாம்பிரா விஷயமா பேசுறேன். நீ என்னடான்னா ஒண்ணுமே சொல்லாமே அறுக்க கொண்டு வந்த ஆடுமாதிரி முழிக்கிறே? ஒன்னைப் பார்க்கும் போதெல்லாம் என்மனசு எவ்வளவு வேதனைப்படும் தெரியுமா? ஒம்புட்டு அழகுக்கு ராணி மாதிரி இருக்கவேண்டிய நீ, இப்படி தினமும் கஷ்டப்படுறே........ ஹூம்.... பாவம்! ஒனக்கு உதவ முடியலேயேன்னு இத்தனை நாள் வரைக்கும் மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருந்தது பொன்னி. இப்பத்தான் சந்தர்ப்பம் வந்திருக்கு. சிவசாமி குடும்பம் இந்தியாவுக்கு போனதிலிருந்து ஆத்துலயத்திலே அந்த தொங்கக் காம்பிரா சும்மா தான் கெடக்கு.... அதை ஒனக்கு குடுக்கிறதா முடிவுசெஞ்சிட்டேன். நீ நாளைக்கே அங்க போயிறலாம் பொன்னி".

நன்றியோடு கணக்கப்பிள்ளையை நிமிர்ந்து பார்த்தாள் பொன்னி. தானும் தனது புருஷன் முருகனும் கட்டிய கனவுக் கோட்டைகளெல்லம் நனவாகி விட்டதைப்போல பூரித்துப் போனாள் பொன்னி.

"ஐயா! ஒங்களுக்கு எப்படி நன்றி சொல்லறதின்னே தெரியலே. ஒங்களுக்கு கோடி புண்ணியம். நான் நாளைக்கே அந்தக் காம்பிராவுக்கு போயிருறேங்க...." கணக்கப்பிள்ளையை கையெடுத்துக் கும்பிட்டாள் பொன்னி.

"உன்னை மாதிரி கஷ்டப்படுறவுங்களுக்கு உதவுறதிலே என் மனசுக்கு ஒரு திருப்பதி பொன்னி. அதுவும் - பொங்கலும் வரப்போற நேரத்திலே ஒனக்கு இந்த உதவி செய்ய முடிஞ்சதே!..... நீ நாளைக்கே அந்தக் காம்பிராவுக்குப் போயிரு: இல்லாட்டி வேறே எவனாவது அந்தக் காம்பிரா மேலே கண்ணு வைச்சிருவான்."

"சரிங்க ஐயா.... நான் நாளைக்கே-காலயிலேயே ஆத்துலயத்து தொங்க காம்பிராவுக்கே போயிருறேங்க. நீங்க மகராசனா இருக்கனும்." மீண்டும் ஒரு முறை கணக்கப்பிள்ளையை கையெடுத்து கும்பிட்டு விட்டு இஸ்டோரை நோக்கி வேகமாய் ஓடினாள் பொன்னி. கணக்கப் பிள்ளையின் உருவிலே ஆண்டவனே வந்து தனக்கு உதவி செய்ததாக எண்ணியெண்ணி பொன்னி பூரித்து போனாள். அவளுடைய நடையிலே இப்போது என்றுமில்லாத ஒரு துள்ளல். பொன்னியின் அந்த ஓட்டத்தைத் - துள்ளலைப் பார்த்து ரசித்துக்கொண்டு நின்றார் கணக்கப்பிள்ளை.

பொன்னியின் துள்ளலை விட வேகமாகத் துள்ளியது கணக்கப் பிள்ளையின் உள்ளம். தனது இந்தச் சின்ன உதவிக்கு எத்தனை கும்பிடு போடுகிறாள் பொன்னி என்று சந்தோஷப்பட்டார் கணக்கப்பிள்ளை. அடுத்த கட்டத்தை எப்படி ஆரம்பிப்பது என்ற சிந்தனை மனதை நெருட அதை அசை போட்டுக் கொண்டே இஸ்டோரை நோக்கி மெதுவாக நடக்கலானார் கணக்கப் பிள்ளை.

சாயந்திரம் வேலைமுடிந்து விட்டுக்கு வந்த பொன்னி சுறுசுறுப்பாக இயங்கினாள். தன் இரண்டு வயது குழந்தையைத் தூக்கி சரமாரி முத்தம் கொடுத்தாள். தனிக்காம்பிராவில் நாளைக்குக் குடியேறப்போவதைப் பற்றி நினைத்து மழைமுகிற்கண்ட மயிலது போல பெரும் உவகை அடைந்தாள். கணக்கப்பிள்ளையின் தயாளக் குணத்தைப் பற்றி தனது சக பெண்களுடன் இராமாயணக் காலமுதல் அளந்து கொட்ட ஆரம்பித்து விட்டாள். அவருடைய கருணையே கருணை! அன்றிரவு அவளுக்கு நித்திரையே வரவில்லை. தனிக் குடித்தனத்தை

பற்றியும், தனது புருஷன் முருகன் இனி நாள் தோறும் சுதந்திரமாக வந்து தங்கிப்போவதை பற்றியும் நினைத்து சிலாகித்துப்போனாள்.

மறுநாள் விடிந்ததும் அவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. தனிக் குடித்தனத்துக்கு தேவையான உடமை களை எடுத்து கொண்டு ஆத்துலயத்து தொங்க காம்பிராவை சுத்தம் செய்து அதிலே குடியேறி விட்டாள். அன்றைக்குத்தான் முருகனும் வந்து சேர்ந்தான். முருகனுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. புருஷனும் பெஞ் சாதியும் தனிவீட்டில் தனித்துவமாகக் குடியேறியிருப்பதை நினைத்து இருவரும் மனசார பேசி மகிழ்ந்தார்கள்.

முருகனுக்கு தினமும் வந்து போவது சங்கடமா இருந்தது. முருகன் பாறை மலை டவுனுக்கு போனதன் பிறகு, பொன்னி அந்த வீட்டிலே தனியாகத் தான் இருந்தாள். அவளுடைய குழந்தை அவளுடைய தாய் வீட்டிலேயே இருந்தது. இரண்டு வருடமாகப் பழகிய பழக்கம் பாட்டியை விட்டு தாயோடு புதுக்காம்பிராவுக்கு வர குழந்தைக்கு மனம் வரவில்லை.

அதோடு, தனது தாய், குடியிருக்கும் வீட்டுக்கு ஆத்துலயத்துக்கும் கிட்டத் தட்ட அரை மைல் தூரம். குழந்தையை தூக்கிக்கொண்டு தாய் வீட்டில் விட்டுவிட்டு வேலைக்கு நேரம் காலத்தோடு போவதிலும் பொன்னிக்கு சங்கடம். அதனால் குழந்தை தாய் வீட்டில் இருப்பதே நல்லதென்று பொன்னி நினைத்தாள்.

நாட்கள் நகர்ந்தன. தைப்பொங்கல் நாளும் வந்துவிட்டது. வீட்டுக்குத் தேவையான உணவுப்பொருட்களோடு முருகனும் வந்து சேர்ந்தான். பொங்கலுக்காக வீட்டுக்கு வந்திருந்த முருகன் பூரித்துப் போனான். காம்பிரா தந்த தனிமை.... பொன்னியும் முருகனும் தனியாகக் கொண்டாடும் முதல் பொங்கல் அல்லவா? இனி மகிழ்ச்சிக்கு ஏதும் பஞ்சமா? மூன்று வருடமாக மனதிலே தேங்கிக்கிடந்த நிராசைகளுக்கெல்லாம் புதுக்காம்பிரா வடிகாலாக அமைந்து விட்டது.

அவர்கள் வீட்டில் பானை மட்டும் பொங்கவில்லை. இருவரும் பொங்கிப் பூரித்துப் போனார்கள். வீட்டுக்கு எப்போதாவது வந்து, மறுநாளே டவுனுக்கு ஓடிவிடும் புருஷன், மறுநாள் மாட்டு பொங்கலன்று மத்தியானம் வரை வீட்டைவிட்டு கிளம்பாமல் இருந்ததை கண்ட பொன்னி, மனதுக்குள்ளேயே தனிக்காம்பிரா கொடுத்த கணக்கப்பிள்ளையை மனதார நினைத்து நன்றி தெரிவித்துக் கொண்டாள். இந்த தனிக்காம்பிராவும், புருஷனுடைய அன்பும் கணக்கப் பிள்ளை போட்ட பிச்சை அல்லவா?

பொன்னிக்கு ஒரு புதுச்சேலை வாங்கிவருவதாகச் சொல்லவிட்டு பின்னேரம் டவுனுக்கு போன முருகன் இன்னும்கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவான் என்று, அந்த பூரிப்பிலே மிதந்து கொண்டிருந்த பொன்னியின் கனவைக் கலைத்தது கதவிலே யாரோ தட்டும் சத்தம்.

புருஷன் வந்துவிட்டான் என்ற பூரிப்பிலே துள்ளியோடி கதவைத் திறந்தாள் பொன்னி. கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார் கணக்கப்பிள்ளை.

நெருப்பை மிதித்ததுப் போல ஒரு கணம் துணுக்குற்ற பொன்னி, மறுகணம் தன்னை சுதாரித்து கொண்டாள். "வாங்க ஐயா............ திடீரென வந்திருக்கீங்களே?"

"சும்மா இப்படியே வந்தேன் பொன்னி. என்ன வீடெல்லாம் வசதியாக இருக்கா? அதை பார்த்திட்டுப் போகலாமுன்னு வந்தேன் பொன்னி."

எல்லாம் நல்ல வசதியதா இருக்குங்க ஐயா.......... இது ஐயா குடுத்த பிச்சை"..... பொன்னியின் குரலில் நன்றி தொனித்தது.

"எல்லாம் ஒன்மேலே நான் வைச்சிருக்கிற அனுதாபம் தான் பொன்னி..... என் மனசு பட்ட வேதனையைத் தாங்கமுடியிலே..... அது தான்காம்பிராவை ஒனக்கு ஒதுக்கிட் டேன்.... ஹூம்...... ஒம்புட்டு கஷ்டம் தீர்ந்திருச்சு.... ஹி ...என் கஷ்டமும் தீர்ந்திருமுன்னு நெனைக்கிறேன்.... ஹி....."

தனது அந்தஸ்து - மரியாதை - கௌரவம் எல்லாம் மறந்து பல்லைக் காட்டிக் கொண்டு நின்றார் கணக்கப் பிள்ளை. பொன்னி குழம்பினாள்.

"ஒம் புருஷன் - முருகன் - நல்லா தண்ணி அடிச்சிட்டு டவுனிலே சுத்திக்கிட்டு இருக்கிறதா சாக்குக்கார பய வந்து சொன்னான். அவன் வர நேரமாகும். நீ தனியா இருக்கே... மாட்டுப் பொங்கலும் அதுவுமா தோட்டமே கலகலப்பாக இருக்கு. உனக்கு காம்பிரா கெடைச்ச சந்தோஷத்ததை நாம ரெண்டுபேரும் சேர்ந்தே கொண்டாடலாமே....."

பொன்னிக்கு கணக்கப்பிள்ளையின் சின்னத்தனம் எல்லாமே புரிந்து விட்டது. எதுவும் சொல்லமுடியாமல் தடுமாறினாள் பொன்னி. பொன்னியின் மௌனம் கணக்கப்பிள்ளையின் ஆசைக்கு நெய்யை வார்த்தது. பொன்னியை நெருங்கினார் கணக்கப்பிள்ளை. அவர் வாயெல்லாம் பல்.

"பொன்னின்னா பொன்னிதான். ஒம்புட்டு அழகுக்கு முன்னாலே எம்புட்டு கௌரவம் கூட கரைஞ்சு போச்சே பொன்னி."

மற்றவர்கள் பலவீனத்தை தன்னுடைய அதிகாரத்திற்கு பலியாக்கி தோட்டத் திலே எத்தனையோ கனிகளை ருசி பார்த்த கணக்கப்பிள்ளைக்கு ஒரே குஷி.

பொன்னி வாயடைத்து நின்றாள். பொன்னியின் தோளில் கையை வைத்தார் கணக்கப்பிள்ளை. செய்வ தறியாது சிலையாய் சமைந்து போய் நின்றாள் பொன்னி.

"அடேய் !"......

சத்தத்தில் அந்தக் காம்பிராவே அதிர்ந்தது. திடுக்கிட்டுத் திரும்பினார் கணக்கப்பிள்ளை. பொன்னியையும் கணக்கப்பிள்ளையையும் ஏறிட்டு முறைத்துப்பார்த்து கனல் தெறிக்க வாசலில் நின்றான் முருகன் - பொன்னி யின் புருஷன்.

அவன் கையிலே ஒரு சிவப்பு நிறச்சேலை.

"ஐயா காம்பிரா குடுத்தது இதுக்குத்தானா? எவ்வளவு நாளாடி இந்த நாடகம்? இன்னியோட இதுக்கு முடிவு கட்டுறேன் பாரடி." என்று ஆங்காரமாக அலறிக்கொண்டே பாய்ந்து வந்த முருகன், அருகில் கிடந்த கோடாரிக்காம்பை எடுத்து ஆவேசமாக விசினான். அடுத்த நிமிடம் அலறித் துடித்து கீழே சாய்ந்தாள் பொன்னி.

கோடாரிக்காம்பை வீசியெறிந்து விட்டு வெளியே ஓடினான் முருகன். சர்வ நாடியும் ஒடுங்கி விக்கித்து நின்றார் கணக்கப்பிள்ளை. இரத்த வெள்ளத்திலே தலைக்குப்புற தரையில் கிடந்தாள் பொன்னி.

இந்த சிவப்பு நிறச்சேலை செங் குருதியில் இன்னும் சிவப்பேறி கிடந்தது.

* * *

எஸ். கிங்ஸ்லி கோமஸ்

# இன்றைய மலையக அரசியல் நிலைமை

1927 ஆம் ஆண்டுகளிற் டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசின் மூலம் இந்திய வம்சாவளி மலைய மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை அளிப்பது பற்றிய பிரச்சனை இலங்கை அரசின் சிந்தனைக்கு பெரும் உந்துதலாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து மலைய மக்களுக்கு வாக்குரிமை வழங்குவதை நம் நாட்டின் சனத் தொகையில் பெரும்பான்மை இனத்தவர் பல வகைகளிலும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். 1928ல் இலங்கை சட்ட சபை உறுப்பினர் ஒருவர் "தோட்ட தொழிலாளி அன்றாடம் அவனது உழைப்பை கவனிப்பதற்கே நேரமில்லை எனவே அவனுக்கு வாக்களிக்கும் உரிமையோ அரசியல் தெளிவோ அவனுக்கு இல்லை" என்று கூறியுள்ளார். அவற்றிற்கு எதிராக மலையக மக்களுக்காக குரல் கொடுக்க முன் வந்த ஒரே தமிழர் நடேசய்யராவார். இதனை தொடர்ந்து 1931 இற்கு பிறகு தான் மலையக மக்களுக்கு தொழிற்சங்க அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 1948 ல் பிரஜா உரிமை சட்டத்தின் மூலம் மலையக தமிழ் மக்களின் உரிமைகளை (அரசியல்) பறித்தனர். அதனைத் தொடர்ந்து மலையக இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் நடவடிக்கைகள் நாட்டின் நொண்டிக் குதிரையாக மாற்றப்பட்டது.

மலையக மக்களின் ஆரம்ப கால வரலாற்றின் மூலம் இந்த மக்கள் வர்க்க, இன, அரசியல் ரீதியாக நசுங்கி வாழ்வதை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலின் மூலம் நாம் காணக்கூடியதாயிருந்த விசேட அம்சம் யாதெனில் மலையகத்தின் அதுவும் மத்திய மாகாணத்தில் வெற்றியையும் தோல்வியையும் மனதிற் கருதாது நல்ல கருத்தினையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தி காட்டுவதற்காகவும் மலையக மக்களின் அடிப்படை பிரச்சனைகளை மக்கள் மத்தியில் இனங்காட்டுவதற்காகவும் இந்த தேர்தல் காலக்கட்டத்தை பல மலையக நலன் விரும்பிகள் பயன்படுத்தி கொண்டனர். இதிலும் மலையக பட்டதாரிகள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், அதிபர் ஆசிரியர்கள் அதிக பட்சமாக எந்த ஒரு பெரும்பான்மை கட்சியையும் எதிர்பாராது அவர்கள் சில சிறிய சக்திகளாக சுயேச்சை குழுக்களினூடாகவும் மற்றும் கட்சிகளிலும் சேர்ந்து பல நல்ல கருத்துக்களை மக்கள் மத்தியிற் கொண்டு சென்றனர். மக்களுக்கு கல்வி எவ்வளவு அத்தியாவசியம் என்று சிலரும் பெரும்பான்மையினத்தாருக்கு இருக்கும் உரிமைகள் எமக்கும் தேவை என்றும் தோட்டங்களை மாகாண சபைகளுக்குள் அடக்க வேண்டும் என்றும் மற்றும் பல அடிப்படை தேவைகளை தட்டி கேட்கும் பிரேரணைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றனர். மலையகத்தின் பட்டதாரிகள் பலர் கடந்த காலங்களில் தங்களின் உத்தியோகத்திலும் தங்களின் சுய காரியங்களிலும் மாத்திரமே பெரும்பாலும் சிந்தனை செலுத்தி வந்தனர். ஆனால் நடந்து முடிந்த மாகாண சபை தேர்தல் பல கல்விமான்களையும், பட்டதாரிகளையும் அரசியலினூடாக மக்களுக்கு அறிமுகம் செய்யக் கூடியதாக இருந்தது.

மலைய மக்கள் தொழிற்சங்கம் என்ற கிணற்றினுள் இன்னும் தவளைகளாக வாழக்கூடாது என்றும் தொழிற்சங்கங்களை மாத்திரம் நம்பிக் கொண்டு மலையகத்தவர்களின் சிறுசிறு பிரச்சினைகளை மட்டும் சிந்தித்து கொண்டுவாழும் சில சுயநல தொழிற்சங்கவாதிகளையும் சிந்திக்க வைக்கவும் மக்கள் கூட தங்களின் பிரச்சனைகளை தாங்களாக சுயமாக பேசி தீர்த்து கொள்ளக்கூடிய சிந்தனைகளையும் செயலாற்றலையும் ஏற்படுத்தக் கூடிய பல அரசியல் தெளிவுள்ள இளம் தலைமுறையினர் முன்வந்தது மலையகத்தின் மற்றும் ஒரு திருப்பம் என்றே கூறவேண்டும். அதற்குமுதல் நடந்த தேர்தல்களையும் விடத் இந்த தேர்தல் வித்தியாசமான தேர்தல் என்றே கூறவேண்டும். ஏனெனில் கடந்த கால தேர்தல் பிரச்சார கூட்டங்களை நோக்குமிடத்து அனைத்து கூட்டங்களுமே வேறொரு கட்சியையோ அல்லது ஒரு தனி நபரையோ விமர்சிப்பதிலும் தாக்குவதிலும் பொய் வாக்குறுதிகளை அள்ளி இறைப்பதிலுமேயே பொழுதை கழித்தன. ஆனால் இம்முறை ஒரு சில கட்சிகளையும் நபர்களையும் தவிர ஏனையோர்கள் மக்களின் சிந்தனையை தூண்டும்வகையிலும், தொழிற்சங்கம் என்னும் கூண்டினில் இருந்து விடுத்து அரசியல் உரிமை சுதந்திரம் உறுதியான வாழ்க்கை அத்திவாரம் என்பவற்றை பற்றி மக்களை சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்த இளம் தலைமுறையினரின் அரசியற் பிரவேசம் மக்களை மட்டும் இன்றி இதுவரை மலையக மக்களுக்கு எந்த ஒரு சேவையையும் செய்யாமல் நாற்காலியை சூடாக்கி கொண்டிருந்

தவர்களையும் மக்கள் பலர் தங்களின் சேவையினை செய்வதற்கு ஒரு தூண்டு கோலாக அமைவதைக் காணுகையில் அவர்கள் மாகாண சபையினுள் செல்லாவிட்டாலும்கூட இவர்களின் வெற்றி மாபெரும் வெற்றி என்றே கூறவேண்டும். பல அரசியல் வாதிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்கள் மத்தியிலிருந்து தான் நான் இன்று ஒரு மந்திரியாகவோ, அமைச்சராகவோ வந்துள்ளேன் என்னும் சிந்தனையை இழந்து விடுகின்றனர். ஒவ்வொரு அரசியல் வாதியும் அடிப்படையில் ஒரு மனிதன்தான் இதை மறக்கக்கூடாது, தனிநபர் பலர் சேர்ந்து தான் ஒரு சமுதாயம் உருவாகிறது. இந்த சமுதாயம் தான் ஒருவனை அரசியல் வாதியாகவோ மந்திரியாகவோ பிரதி நிதித்துவம் படுத்துகின்ற தென்பதை மறந்து விடக்கூடாது. தான் தலைவனான காரணத்தினாலோ அல்லது மந்திரியான காரணத்திலேயோ சமுதாயம் என்னும் அடி மண்ணிலிருந்து மனிதர் என்கின்ற வேரை விரிப்பது நியாயமில்லை. மக்களின் வாக்குகளை பெறும் வரையில் மாத்திரம் மக்கள் மத்தியில் ஊடுருவி இந்த நிலையை மாற்றுவதற்காக மலையக இளந்தலைமுறையினரின் சேவை வியக்கத்தக்கதே!

இதுவரைக்காலமும் மலையக அரசியல்வாதிகளும் சரி தொழிற்சங்க வாதிகளும் சரி, பாசிபிடித்து, கொசு உற்பத்தியாகும் தேங்கிய குட்டையாக காட்சி தந்தனர். இந்த நடந்து முடிந்த மாகாண சபைத்தேர்தலின் மூலம் மக்களும்சரி பெரும்பான்மையான அரசியல்வாதிகளும் சரி யாருக்கும் உபயோகம் இல்லாமல் பாசி பிடித்த தேங்கிய குட்டை நீராய் இல்லாமல் ஓரளவு சலசலத்து ஓடும் ஓடை நீராய் மாறி அப்பப்ப ஒரு செடி உயிர்வாழ, ஒரு மனிதன் தாகம் தீர்க்க தங்களது சேவையைச் செய்வார்கள் என நம்பும் வகையில் உள்ளது. இன்று இருக்கும் ஓரளவான அரசியற் தெளிவு மலையகத்திற்கு வருங்காலத்தில் ஒரு திடமான உறுதியான அரசியல் உயர்வை ஏற்படுத்த காரணியாக அமையும்.

## 'இதயத்தீ'

– புஷ்பநேசன் –

ஓ.. கனவான்களே!
நாங்கள் கட்டிய மேடைகளில்
நின்று கொண்டுதானே
வாக்குறுதிப் பூக்களை அள்ளியிறைத்தீர்கள்.
விழா முடிந்ததும் பிடுங்கப்பட்ட
மேடையின் கம்புகளைப் போல
உங்களின் வாக்குறுதிகளும்
இற்றுப்போய் விட்டனவோ
இல்லை இல்லை அற்றுப்போய் விட்டனவோ

சாக்கடைச் சமுத்திரங்களும்
சகதி குழம்புகளும்
சதிராட்டம் போடும் எங்கள் வீட்டு
வாசல் படிகளில் எல்லாம்,
எவருமே ஏறத் தயங்கியபோது
சாக்கடையெல்லாம்
சந்தனக் குழம்பென்று சொல்லிக் கொண்டு வந்து
"சமத்துவக்" கடை விரித்தீர்களே...!

உச்சிமலைக்குறுக்குப்படைகளைக் கண்டு,
நாங்களே
ஒரு கணம் மலைத்து நின்ற போது,
குறுக்குப் படிகளா இவை,
குளிர் நீரோடை அல்லவா இவை
என்று கூறிக் கொண்டு
குதித்துக் குதித்துச் சென்று கும்பிடு போட்டீர்களே?

தயங்கித் தயங்கி
நாங்களே தடம்பதிக்கும் பள்ளங்களில் எல்லாம்,
தடுமாறாமல் சென்று நீங்கள்
விதைத்துவிட்டு வந்த
"வாக்குறுதிக்" கனிகள் இன்று,
"எட்டாக் கனி" யாகிப் போனதே
"ஒற்றுமை" என்பதே உணர்ந்திடச் சொன்னீர்கள்.
உணர்ந்த பின்பு ஒற்றுமையாய் நிற்கிறோம்.
"ஏமாந்து போய்"

உங்களுக்கு முகவரி தந்தவர்கள் நாங்கள்
இன்று எங்களின் முகவரிகளையே
தொலைத்து விட்டீர்களோ?
ஆனால் ஒன்றை மட்டும் மறந்து போய் விடாதீர்கள்.
நீங்கள் வீடு கட்டியிருப்பது,
எங்களின் இதயத் "தீ"ப் பிழம்புகளுக்கு மத்தியில்தான்.

# மலையகத்தில் தொழிற்சங்கத்தின் தோற்றம் - சில அறிமுக குறிப்புக்கள்.

ஜெ.சற்குருநாதன்.

தென்னிந்தியாவில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாத இந்திய வம்சாவளியினரான மலையக தமிழ் மக்கள் இலங்கை போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கொடூரமான சுரண் டல் முறைகளுக்கும் இலங்கை சிங்கள முதலாளித்துவ அடிவருடிகளின் சுரண்டல் முறைகளுக்கும் ஆளாகினர். சுருக்கமாக சொல்லப்போனால் இருப தாம் நூற்றாண்டின் புதிய அடிமை களாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் போக்குவரத்து பாதைகள் அமைக்க அவர்கள் வர வழைக்கப்பட்டனர். பின்னர் மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் பெருந் தோட்ட பயிர்ச்செய்கை தொடங்கப் பட்டதோடு இவர்களின் வருகை பெருந்தொகையாக காணப்பட்டது. மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் ஒரு இருண்ட வாழ்க்கையினை இம்மக்கள் மேற்கொள்ள வேண்டி யிருந்தது.

பிரித்தானிய துணை ஏஜண்டு களாக இருந்த கங்காணிமார்கள் தென்னிந்தியாவில் நிலவிய சாதகமான சூழ்நிலையினை பயன்படுத்தி இலங்கைக்கு அழைத்து வந்தனர். கங்காணியின் தலைமைத்துவத்தின் கீழ் ஒவ்வொரு தோட்டங்களிலும் சிறையில் வாழ்வது போன்ற மோசமான வாழ்க்கையினை இம்மக்கள் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் இவர்களது நல உரிமைகளை க்வனிக்க கங்காணிமார்களே பொறுப்பாக இருந்தனர். இவர்களது நல உரிமைகள் கங்காணிமார்களின் கட்டுபாட்டின் கீழ் அமைந்திருந்தன. அரசியல் ரீதியல் எவ்வித உரிமைகளும் இல்லாது உழைப்பு ஒன்றே மூலதனமாக கொண்டு அடிமை வாழ்வினை அனுபவித்து வந்தனர். இதற்கு பிரதான காரணம் பிரித்தானிய ஏகாதிபத்தியமும் சிங்கள பேரினவாதிகளும் இம்மக்கள் மத்தியில் இருந்த கங்காணிமார்களுமே ஆவர். இந்திய அரசாங்கமே பிரித்தானியா கட்டுபாட்டுக்குள் இருந்ததன் காரணமாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவர்களின் வருகை மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலும் கொழும்பு போன்ற நகர மையங்களிலும் அதிகரித்து காணப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்க 1915 ஆண்டு ஏற்பட்ட சிங்கள - முஸ்லீம் கலகம் இலங்கையில் புதிய அரசியல் எழுச்சியினை தோற்றுவித்தது. இந்த எழுச்சியானது இலங்கை தேசிய இனத்தின் வெளிப்பாடாக இல்லாமல் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பேரினமாக இருந்தது. இதற்கு அநாகரிக தர்மபால போன்றோர் துணை நின்றனர் இந்த எழுச்சியின் பின்னர் இலங்கையில் முதலாவது தொழிற்சங்கத்தினை ஏ.இ. குணசிங்கா தோற்றுவித்தார். இவர் காந்தீய கொள்கையே தமக்கு பிரதானமானது எனக் கூறிக் கொண்டு இனவாத சகதிக்குள் மறைந்திருந்தார். இத்தொழிற்சங்கம் கொழும்பு போன்ற நகரங்களில் பிரதான செயற்பாடுகளை கொண்டிருந்திருந்தது. இம்மக்கள் மத்தியில் ஆரம்பத்தில் விழிப்புணர்ச் சியினை ஏற்படுத்திய கோ.நடேசய்யர் இவரது தொழிற்சங்கத்தில் இணைந்திருந்தார். இதன் மூலமாக இம்மக்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் குறைந்த பட்சமாவது கிடைக்கும் என நம்பினார். ஆனால் சிங்கள தேசிய - இனவாத சிறைக்குள் அடக்கிக் கொண்ட இத்தொழிற் சங்கம் காலபோக்கில் மலையக தொழிலாளர்கள் இணைவதை தவிர்த்து வந்தது. அத்துடன் மற்றொரு இந்திய வம்சாவழியினரான மலையாளிகளுக்கு எதிரான இன வன்முறையினையும் ஏ.இ.குணசிங்கா ஏவிவிட்டார். பின்னர் இதனை முழு இந்திய வம்சாவளி யினர்களுக்கு எதிரான இன ஒடுக்கு முறையினை ஐ.தே.க தலைவர்கள் வளர்த்து விட்டனர்.

1930 ஆண்டு ஏற்பட்ட உலக பொருளாதார பெரும் மந்தத்தை தொடர்ந்து நகரப் புறங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் பலர் வேலையற்றவர்களாக மாறினர். இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஏ.இ.குணசிங்கா போன்ற தலைவர்கள் இந்திய தொழிலாளர்களால்தான் சிங்கள தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகின்றது என பிரச்சாரம் செய்தனர். மேலும் தொழிற்சாலைகளில் வேலை வழங்கும் பொழுது சிங்கள தொழிலாளர்களுக்கு அதிக விகிதம் வழங்கப்பட வேண்டும் எனவும். கோரினர். இவ்விடயங்கள் பெரும்பாலும் நகரமையங்களில் சூழன்று கொண்டிருந்தது. இலங்கையர் மயமாக்குதலே இவர்களது பிரதான குறிக்கோளாக இருந்தது.மேற்கூறப்பட்ட விடயத்தினை ஏ.இ.குணசிங்கா சட்ட சபை வரை எடுத்துச் சென்றார் என்பது குறிப்பிடதக்கது.

மலையக மக்கள் மத்தியில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்த கோ.நடேசய்யர் ஏ.இ.குணசிங்காவின் தொழிற்சங்கத்தில் இருந்து விலக இலங்கை - இந்திய காங்கிரசினை தோற்விக்க முயன்றார். இதே வேளையில் 1930களில் சிங்கள தலைவர்கள் இலங்கை மயமாக்கலை கண்டித்து பல அமைப்புகள் போராட்டங்கள் நடாத்தின. அவற்றுள் திரு. வள்ளியப்பா செட்டியார் தலைமையிலான இந்திய சேவா சங்கமும் திரு. எல். தேசாய் தலைமையிலான இலங்கை இந்திய சங்கமும் முக்கிய மானதாகும். மலையக தொழிற்சங்க தோற்றத்தின் முன்னோடியாக இவை இரண்டு சங்கங்களும் இருந்தன என்றால் மிகையாகாது: 1930 ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தினை தொடர்ந்து மெதுவாக மலையக மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி துளிர்விடத் தொடங்கியது. குறிப்பாக 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னரே இத்தகைய நிலைமை தோன்றியது எனலாம்.

ஆரம்பத்தில் மலையக தமிழர்கள் மத்தியில் தோன்றிய பல்வேறு அமைப்புக்கள் பெரும்பாலும் காந்திய அலையில் தீவிரமாக சிக்குண்டிருந்தன. இலங்கை மயமாக்கலுக்கு எதிராக பல்வேறு கூட்டங்களையும் சத்தியா கிரகங்களை நடத்தியும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. பின்னர் இலங்கை மயமாக்கல் விடயத்தினை காந்திக்கு அறிவித்தனர். காந்தி தன்னுடைய சீடரான நேருவை அனுப்பி வைத்தார். 1939 ஆம் ஆண்டு நேரு இலங்கைக்கு வந்து இலங்கை மயமாக்கலை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டார். ஆனால் அது நடக்கவில்லை. அக்காலத்தில் இந்திய காங்கிரஸ்கட்சியில் இடதுசாரி கருத்துக்களிலும் நடை முறைகளிலும் பெரிதும் கவரப் பட்டிருந்தார். இலங்கையில் இம்மக்கள் மத்தியில் இருந்த அமைப்புகளுக்கு ஒரு வேண்டு கோளினை முன்வைத்தார். அதாவது இந்தியர்கள் தமது ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஒன்றுபட்டு போராடுவதன் மூலமே உரிமைகளை வென்றெடுக்கலாம் என கூறினார். மேலும் இந்தியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதனது விளைவாக 1939ம் ஆண்டு ஆடிமாதம் 15ஆம் திகதி அதிகாலை 1.40 மணியளவில் இலங்கை - இந்தியன் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. கொழும்பு போன்ற நகரங்களில் உருவாகியிருந்து. இந்திய தேசிய வாதத்தின் தோற்றமாக இவ்வமைப்பு இருந்ததால் ஆரம்பத்தில் மலையக தொழிலாளர் இணைவதை தயக்கம் காட்டத்தொடங்கியது. ஆனால் நேரு அவர்கள் தொழிலாளர்களை இணைப்பதன் மூலமே இந்தியர்களின் கோரிக்கையினை வென்றெடுக்கலாம் என கூறினார். இதன் பின்னரே தொழிலாளர்கள் இவ்வமைப்புக்குள் சேர்க்கப்பட்டனர். இலங்கை - இந்திய காங்கிரஸே இந்திய தேசிய வாதத்தினை முன்னெடுத்த அமைப்பாக விளங்கியது. அத்துடன் மலையக மக்களின் அரசியல் இயக்கமாக பரிணமித்து வளர்ந்து இதன் தலைவராக புதுக்கோட்டை சட்ட சபை உறுப்பினர்.V.R.M.V.A.இலக்குமணன் செட்டியார் தெரிவு செய்யப்பட்டார்.

இதனது கிளைகள் ப்ல்வேறு தோட்டப்புறங்களில் அமைக்கப் பட்டன. இதனை அமைப்பதற்கு பல்வேறு தொழிலாளர்கள் உயிரை துறந்தும் போராட்டங்களை நடத்தியும் கிளைகள் அமைத்தனர். இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக பிரித்தானிய அரசும் இலங்கை சிங்கள அடிவருடிகளும் மிக மோசமான தண்டனைகளை கொடுத்தனர். அதனையும் மீறிதொழிலாளர்கள் இதனது கிளைகளை அமைத்தனர்.

அதனது பிரதான கிளை கம்பளையில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதன் தலைவராக சௌமிய மூர்த்தி தொண்டமான் தெரிவு செய்யப் பட்டார். இதனது அமைப்பானது தொழிலாளர்கள் மத்தியில் பணியாற்றுவதற்காக 1940இல் பெரிய சுந்தரம் தலைமையில் அப்புத்தளை கதிரேசன் கோவிலில் வைத்து இலங்கை - இந்திய தொழிற்சங்கம் உருவாக்கப் பட்டது. இதுவே மலையகத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் தோற்றுவித்த முதலாவது தொழிற்சங்கமாகும். அக்காலத்தில் இப்பணியானது புரட்சிகரமாகவும் இதுவே பின்னர் 1950 இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றது. சுதந்திர இலங்கையின் பின்னர் தொழிற்சங்கமான பல்வேறு சங்கங்களாக பிளவுபட்டு மக்கள் மத்தியில் இயங்கி வருகின்றது.

மிகவும் சிக்கலான காலக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கம் இன்று அதனது புரட்சிகரமான பாதையினை விட்டு சுயநல மனப்பான்மையில் சென்று கொண்டிருக்கின்றது. எத்தனை போராட்டங்களுக்கு முகம் கொடுத்து இருந்ததாலும் வியர்வையாலும் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று இம்மக்களை கூறுபோட்டுக் கொண்டிருக்கின்றன. வளர்ந்து வந்த மலையக தேசிய வாதத்தினையும் இத்தொழிற் சங்கங்கள் மழுங்கடித்து கொண்டிருக்கின்றன.

## என் ஜீவனுள்ள ஸ்நேகங்கள்

சத்தியத்தை
சமத்துவத்தை - அதன்
தத்துவத்தை
எடுத்தியம்பும் - என்
சுருதியுள்ள
ராகங்கள்

மனிதங்களின்
புனிதங்களில்
அழிவுற்றிருக்கும்
அறிவு
அகதிகளை
ஆதரிக்கும் - என்
ஆத்மீக
ராகங்கள்

வற்றி விட்ட
இல்லை. இல்லை
தடுத்து
வைக்கப்பட்டிருக்கும்
என்
எண்ணங்களில்
பங்கு கொள்ளும்
இதய
ராகங்கள்.

ஜீரணிக்காமலே
ஜனனிக்கக்
காத்திருக்கும்
என்
கவிதைகள்
என்றுமே
ஜீவனுள்ள
ஸ்நேகங்கள்.

—மர்ஜூனா – ஜெமால்தீன்

# மலையகக் கலண்டர் 1994

**JANUARY**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**FEBRUARY**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | | | | | |

**MARCH**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**APRIL**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**MAY**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**JUNE**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

**JULY**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**AUGUST**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**SEPTEMBER**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

**OCTOBER**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**NOVEMBER**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

**DECEMBER**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

| | | |
|---|---|---|
| ஜனவரி | 1 | வருடப்பிறப்பு |
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் தினம் |
| ஜனவரி | 7 | முல்லோயா கோவிந்தன் சுட்டுக் கொல்லப்பட்டார் |
| பெப்ரவரி | 4 | தேசிய தினம் |
| பெப்ரவரி | 11 | மலைநாட்டுக்காந்தி இராஜலிங்கம் நினைவு தினம் |
| மார்ச் | 8 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 26 | உலக நாடக தினம் |
| ஏப்ரல் | 13,14 | தமிழ், சிங்கள புத்தாண்டு |
| ஏப்ரல் | 26 | தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கு குரல் கொடுத்த ஐ.எக்ஸ். பெரைரா நினைவு தினம் |
| ஏப்ரல் | 29 | இலங்கை இந்திய காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஜனாப்.ஏ.அஸீஸ் நினைவு தினம் |
| மே | 1 | உலக தொழிலாளர் தினம் |
| மே | 12 | தொழிற்சங்கவாதி கே.ஜி.எஸ் நாயர் நினைவு தினம் |
| மே | 15 | தியாகி சிவனுலெட்சுமணன் நினைவு தினம் |
| ஜூன் | 4 | டி.இராமானுஜம் நினைவு தினம் (முன்னாள் அளுத்நுவர எம்.பி, கண்டி மாநகர துணை மேயர்) |
| ஜூன் | 11 | பெரியார் பி.டி.ராஜன் நினைவு தினம் |
| செப்டம்பர் | 3 | மலையக சிறுகதைச் சிற்பி என்.எஸ்.எம். ராமையா நினைவு தினம் |
| செப்டம்பர் | 3 | கோ. நடேசய்யரின் தேசபக்தன்(1924) முதல் இதழ் பிரசுரமானது. |
| செப்டம்பர் | 12 | மகாகவி பாரதி நினைவு தினம் |
| செப்டம்பர் | 14 | மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை பிறந்த தினம் |
| செப்டம்பர் | 18 | மலையக கவிதை முன்னோடி அருள் வாக்கி அப்துல்காதர் நினைவு தினம் |
| நவம்பர் | 7 | தேசபக்தன் கோ.நடேசய்யர் நினைவு தினம் |
| நவம்பர் | 8 | தொழிற்சங்க மேதை ஜோர்ஜ் ஆர். மோத்தா நினைவு தினம் |
| டிசம்பர் | 2 | தொழிலாளர் தேசியசங்க ஸ்தாபகர் வி.கே. வெள்ளையன் நினைவுதினம் |

**குன்றின் குரல்**